வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 30.12.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 21 | பக்கங்கள் : 16

## தேர்தலுக்கு நிதி இல்லை என்பது ஜனாதிபதியின் அரசியல் சூழ்ச்சி!

### ஜே. வி. பி. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 30

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்திடம் ஆயிரம் கோடி ரூபாய் இல்லை என்றால் 2023ஆம் ஆண்டு அரச செலவுக் காக அரசாங்கம் 7 இலட் சத்து 90 ஆயிரம் கோடி ரூபாய் ரூபா நிதியை எவ் வாறு திரட்டிக் கொள் ளும். தேர்தலுக்கு நிதி யில்லை என்பது ஜனாதி பதியின் பிறிதோர் அரசி யல் சூழ்ச்சி என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி) தலை வர் அநுரகுமார 11

### வவுனியா, மன்னார் மாவட்டங்களில்

## பயிரிடப்படாத 14,000 ஏக்கரை கையகப்படுத்த அரசு திட்டம்!

கொழும்பு, டிசெ. 30

5 வருடங்களாக பயிர் செய்யப்படாத வயல் நிலங்கள் உட்பட 14 ஆயிரம் ஏக்கர் காணி களை கையகப்படுத்த அரசு முடிவு செய்துள் ளது.

வவுனியா, மன்னார், புத்தளம், குருநாகல், பதுளை மாத்தளை, நுவ ரெலியா, மொனராகலை ஆகிய மாவட்டங்களி லுள்ள காணிகளே முதல் கட்டமாக இவ்வாறு கையகப்படுத்தப்பட வுள்ளன. இதற்கான நட வடிக்கைகளை எடுக்கு மாறு விவசாய அமைச் சர் மகிந்த அமரவீர விவசாய அபிவிருத்தி திணைக்களத்துக்கு பணிப்புரை விடுத் துள்ளார். 11

## அறிவுச் சுட்டெண் தெற்காசியாவில் இலங்கை முதலிடம்!

நியூயோர்க், டிசெ. 30

உலக அறிவுச் சுட் டெண்ணில் இலங்கை 43.42 சதவீதத்துடன் 79 ஆம் இடத்தைப் பிடித் துள்ளது. தெற்காசிய நாடுகளில் இலங்கை முதலிடத்திலுள்ளது.

132 நாடுகளை உள்ளடக்கியதாக இந்தப் பட்டியல் 11

# புளொட், ரெலோ தவிர வேறுகட்சிகளுடன் தேர்தல் கூட்டணி அமைக்கவே மாட்டோம்!

### தமிழரசு கட்சியின் மத்திய குழுவின் முடிவாம்

கொழும்பு, டிசெ. 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்போதுள்ள கட்சிகளை தவிர வேறு கட்சி களுடன் தேர்தல் உடன்பாட்டுக்கு செல்வதில்லை என்று இலங்கை தமிழரசு கட்சி யின் மத்திய குழு முடிவு செய்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். 11

## 24 இலட்சம் மக்கள் வறுமையின் பிடியில்!

### சர்வதேச செஞ்சிலுவை சங்கம்

கொழும்பு, டிசெ. 30

நாட்டின் மக்கள் தொகையில் 24 இலட்சத் துக்கும் அதிகமானவர்கள் வறுமையில் வாடுகின்ற னர் என்று சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில்,

இலங்கையில் ஏற் பட்ட நெருக்கடி நிலை யைத் தொடர்ந்து, கடந்த 2021ஆம் ஆண்டில் நாட் டின் மக்கள் தொகையில் சுமார் 11வீதமானோர் - அதாவது 24 இலட்சத் துக்கும் அதிகமான மக்கள் வறுமையில் வாடு கின்றனர்.

நெருக்கடியின் தொடக்கத்தில் ஏழ்மை யான குடும்பங்கள் தங் கள் வருமானத்தில் கிட்டத்தட்ட பாதியை 11

## றைஸ் குக்கரில் சமைக்கவே சீனாவின் அரிசி பொருத்தம்!

### சீனத் தூதுவர் இப்படி விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

சீன அரசாங்கம் வழங்கிய அரிசியை சில நிமி டங்களே சமைக்கவேண்டும். அதனை, மிதமான வெப்பத்தில் றைஸ் குக்கரில் சமைப்பதற்கே பொருத்தமானது என்று சீனாவின் உதவித் தூதுவர் விளக்கமளித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நிவார ணப் பொதிகளை வழங்கிய பின்னர் செய்தியாளர்க ளுடன் அவர் உரையாடினார்.

இதன்போது, சீனா வழங்கிய அரிசி தொடர் பில் சமூக வலைதளங்களில் பரவிவரும் தகவல்கள் தொடர்பில் அவருக்கு விளக்கமளிக்கப் பட்டது. இதைக் கேட்ட அவர், தாம் 11

## சர்ச்சையான சீனாவின் அரிசி நிவாரணத்திலிருந்து நீக்கம்!

யாழ்ப்பாணம், டிசெ. 30

சீனாவின் நிவாரண திட்டத்தில் வழங்கப் பட்டிருந்த சர்ச்சையை ஏற்படுத்திய அரிசி நிவாரண திட்டத்திலிருந்து நீக்கப்பட்டதாக இலங்கை செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள் ளது.

யாழ்ப்பாணம் வந்த சீனாவின் உதவி தூது வர் ஹூ வெய் நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் சீன செஞ்சிலுவை சங்கம், இலங்கை செஞ்சிலுவை சங்கம் ஊடாக வழங் கிய நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தார். 11

## சஹ்ரானுக்கு நெருக்கமானவர் தமிழகத்தில் புதனன்று கைது!

### ஐ. எஸ். அமைப்பின் உறுப்பினராம்

சென்னை, டிசெ. 30

ஈஸ்டர் தாக்குதலை நடத்திய சஹ்ரான் ஹாசி முடன் நெருக்கமான தொடர்புகளை பேணி வந்தவர் என்று கூறப் படும் ஒருவர் இந்தியா வில் கைது செய்யப்பட் டுள்ளார்.

இந்திய தேசிய புல னாய்வு விசாரணை முகமை (என். ஐ. ஏ) அவரை நேற்று முன் தினம் கைதுசெய்துள் ளது.

ஐ. எஸ். ஐ. எஸ். பயங் கரவாத அமைப்பை சேர்ந்தவர் என்று சந்தே கிக்கப்படும் ஷெயிக் ஹிதயதுல்லா என்பவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

கைது செய்யப் பட்ட நபர் கடந்த 11

## ஜனவரி முதல் வாரத்தில் புதிய கூட்டணி அமையும்

### சுதந்திரக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி புதிய கூட்டணியை அமைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரான பாராளு மன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர இதனைத் தெரி வித்துள்ளார்.

புதிய கூட்டணி மூலம் எதிர்வரும் தேர்தலை எதிர் கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## சுகாதார விதிமுறைகளை கட்டாயம் பின்பற்றுங்கள்!

### அரச மருத்துவ அதிகாரிகள் அறிவுறுத்து

கொழும்பு, டிசெ. 30

கோவிட் தொற்று அதிகரித்துள்ள நாடுகளி லிருந்து வரும் சுற்றுலா பயணிகளை ஒரு பொறி முறையின் கீழ் நாட்டுக் குள் அனுமதிக்க அரசாங் கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தடுப்பூசிகளை முழுமை யாகப் பெற்றுக் கொண் டவர்களும் சுகாதார வழிமுறைகளை முறை யாக பின்பற்றி அவதான மாக செயல்பட வேண் டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அந்தச் சங்கத் தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் 11

## விவசாயிகளுக்கு ரூ.20 ஆயிரம் இரு வாரங்களில் வழங்கப்படும்!

### விவசாய அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

ஒரு ஏக்கருக்கு மேல் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 20 ஆயி ரம் ரூபாய், ஒரு ஏக்கருக் குக் கீழ் செய்கை செய் வோருக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு அடுத்த இரு வாரங்களுக் குள் விவசாயிகளின் கணக் கில் வரவு வைக்கப்படும்.

இவ்வாறு அறிவித் துள்ளார் விவசாய அமைச் சர் மகிந்த அமர வீர.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 11

# பாடசாலைகளில் போதைப்பொருள் பரவலைத் தடுக்க விசேட நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 30

பாடசாலைகளில் போதைப் பொருள் பரவலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித் துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. கல்வி அமைச்சு அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

அமைச்சர் தலைமையில் கல்வி அமைச்சு மற்றும் அது தொடர்பான ஏனைய நிறுவ னங்களின் அதிகாரிகளின் பங்கு பற்றுதலுடன் விசேட கலந்து ரையாடல் ஒன்றும் இடம்பெற் றது.

பாடசாலைகளில் போதைப் பொருள் பரவலைத் தடுப்ப தற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட் டது. கல்வி அமைச்சால் வெளி யிடப்பட்டுள்ள 20/2020 (20.07.2020) சுற்றறிக்கையில் "கல்வி நிறுவன வளாகங்களை புகையிலை பொருட்கள், மது பானம் மற்றும் பாவனையற்ற கல்வி வலயமாக மாற்றுவது தொடர்பில் மீண்டும் ஒருமுறை விசேட கவனம் செலுத்துவது தொடர்பிலும் ஆலோசிக்கப் பட்டது.

"அதன்படி செயல்படுமாறு மீண்டும் அதிபர்களுக்கு அறி விக்க முடிவு செய்யப்பட்டது. அத்துடன், பாடசாலை, பிராந் திய மற்றும் மாகாண மட்டங் களில் போதைப்பொருள் தடுப் புக் குழுக்களை உருவாக்கி, பாடசாலை வளாகங்களில் இருந்து போதைப்பொருளை உரிய முறையில் அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது" என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் மாணவர்களின் புத்தகப் பைகளை பரிசோதிப்பதற்கு அவசியமானால், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் அடங்கிய குழு வொன்றை அமைத்து பணி களை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆலோசிக்கப்பட்டது.

போதைப்பொருள் பாவனை யாளர்களை இனங்கண்டு அவர் கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆசிரியர்களுக்கு விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை நடத்துவதுடன் பாட சாலைச் சூழலை இனிமையான கல்விச் சூழலாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# லெனின் மதிவானம் நினைவாக நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை!

ஹற்றன், டிசெ. 30

அமரர் லெனின் மதிவானம் நினைவாக தொகுக்கப்பட் டுள்ள "லெனின் மதிவானம் இளமை - புலமை- இனிமை" எனும் நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாகித்யரத்னா மு. சிவ லிங்கம் தலைமையில் ஹற்றன் டிக்கோயா நகர சபை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

பாக்யா பதிப்பகத்தின் வெளியீடாக, நோட்டன் வாசகர் வட்டத்தின் ஏற்பாட் டில் இடம்பெறவுள்ள இந்நிகழ் வில், வரவேற்புரையை வாசகர் வட்டத்தின் தலைவர் மு. இராமச்சந்திரன் நிகழ்த்த வுள்ளார்.

பேராசிரியர் பால. சுகுமார், மல்லியப்புசந்தி திலகர், ஜே. சற்குருநாதன், சிராஜ் மஷ்ஹூர், சுமதி அன்பரசு, சிவ ஜேசு நேசன், சு.வில்சன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ள னர்.

நன்றி நவிலலை அமரர் லெனின் மதிவானனின் இளைய சகோதரரும் நீதிபதியுமான ஆர்.ஜே.ட்ரொட்ஸ்கி வழங்கு வார். (ஐ)

# நவம்பரில் 3,560 கோடி ரூபாயை வருமானம் ஈட்டிய மின்சார சபை!



கொழும்பு, டிசெ. 30

இலங்கை மின்சார சபை நவம்பர் மாதத்தில் 3 ஆயிரத்து 560 கோடி ரூபாயை மொத்த வருமான மாக ஈட்டியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள் ளார்.

தற்போதைய கட்டணக் கட்டமைப்பின்படி, ஒக்ரோபர் மாதத்துக்கான மின்சார சபை யின் மொத்த வருமானம் மூன்று ஆயிரத்து 560 கோடி ரூபாயா கும் என அமைச்சர் கூறினார்.

2023 ஜனவரியில் மின் நிலையங்களை இயக்கு வதற்கு கனரக எரிபொருள் எண்ணெய், நாப்தா மற்றும் டீசல் ஆகிய வற்றின் தேவை 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் என அமைச் சர் விஜயசேகர தெரிவித்தார். ஜனவரி மாதத்துக்கான நிலக்கரி கொடுப்பனவுகளுக் கான தேவை மூவாயிரத்து 835 கோடி ரூபாய் என அவர் குறிப் பிட்டார். (ஐ)

# யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவை கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. நேற்று வரை இந்த விமான சேவையை 500 பேர் பயன்படுத் தியுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 200 பய ணிகள் பயணித்துள்ளனர். இதேநேரம், யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்கு 300 பயணிகள் பயணித்துள்ளனர்.

யாழ்ப்பாணம்- சென்னை விமான சேவை ஆரம்பித்த பின்னர் யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் ஊடாக மக்கள் பயணிக்க ஆர்வம் காட்டி வரு கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்த பிக்குவும் சகோதரனும் கைதாகினர்!

கொழும்பு, டிசெ. 30

11 வயதான சிறுமியை பாலி யல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் கீழ், விகாரையின் பிக்குவும் அந்த பிக்குவின் சகோதரனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை, தொம்ப ஹாவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லியன்கொல்லை பிரதேசத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத் துவதற்கு உடந்தையாக இருந்த சிறுமியின் பாட்டி மற்றும் அத்தை ஆகிய இருவரும் புதன்கிழமை கைது செய்யப் பட்டுள்ளனர்.

சிறுமி, கந்தானை பிரதேசத் திலுள்ள உறவினர் வீட்டி லிருந்து பாடசாலை சென்று வந்துள்ளார். பாடசாலை விடுமுறைக்காக லியன் கொல்லை பிரதேசத்திலுள்ள உறவினர்களின் வீட்டுக்கு சிறுமி வந்துள்ளார்.

சிறுமியை பாட்டி விகா ரைக்கு அழைத்துச் சென்றுள் ளார். அந்த விகாரையில் வைத்து பிக்குவும், சிறுமியின் அத்தையின் வீட்டில் வைத்து பிக்குவின் சகோதரனும் சிறுமியை துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தியுள்ளனர் என்பது விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

கந்தானைக்கு சிறுமி திரும் பியதன் பின்னர், தனக்கு நேர்ந்ததை உறவினர்களிடம் தெரிவிக்க, இதுதொடர்பில் கந்தானை பொலிஸ் நிலையத் தில் செய்த முறைப்பாட்டு அமைய, கந்தானை பொலிஸா ரின் அறிவுறுத்தலுக்கு இணங்க தொம்பஹாவெல பொலிஸார். இந்த நால்வரையும் கைது செய்தனர். (ஐ)

# மாலைதீவு ஜனாதிபதி இலங்கை வந்துள்ளார்!



கொழும்பு, டிசெ. 30

மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் முகமட் சொலி தனிப்பட்ட பயணமாக இலங்கை வந்துள்ளார்.

மாலைதீவு பொருளாதாரம் வெற்றி கரமாக கொரோனாவுக்கு முந்தைய நிலைக்கு திரும்பியுள்ளதாக அறிவித்த மறுதினம் அவர் இலங்கை வந்துள்ளார்.

இந்த வருடம் மாலைதீவின் பொருளாதார வளர்ச்சி 12.3 வீதமாக காணப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. அடுத்த வருடம் இது 7.6 வீத மாக காணப்படும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ஐ)

# திறமையான மருத்துவர்கள் வெளியேற அரசே காரணம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, டிசெ.30

திறமையான மருத்துவர் கள் மற்றும் தொழிலாளர்கள் நாடு களை விட்டு வெளி யேறுவது குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வரு கிறது. இது நாட்டுக்கு பெரும் நெருக் கடியை ஏற்படுத்தும் என அர சாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் ஹரித அலுத்கே சுட்டிக்காட்டினார்.



வருமான வரிச் சட்டங்களில் முன்மொழியப்பட்ட திருத்தங் கள் நாட்டை பின்னோக்கி தள்ளுகின்றன.

நாட்டை விட்டு வெளியே றும் மருத்துவர்களை நிறுத்து வது குறித்து பலர் பேசுகின்ற னர். ஆனால், அத்தகைய முடி வுக்கான காரணத்தை ஆராய யாரும் தயாராக இல்லை - என்றார்.

இதேவேளை, புதிய தனி நபர் வருமான வரியை மீளப் பெறுமாறு கோரி 20 ஆயிரத் துக்கும் மேற்பட்ட மருத்து வர்களின் கையொப்பங்க ளுடன் கூடிய மனு ஒன்று விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரி வித்துள்ளது. (ஐ)

# மன்னாரில் விபத்து இளம் குடும்பஸ்தர் பலி!

மன்னார், டிசெ. 30

டிபெண்டர் ரக வாகனம் மோட்டார் சைக்கிளை மோதிய விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரண மானார்.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, தாராபுரம் பகுதி யில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், உயிரிழந்தவர் மன்னார் பனங்கட்டுகொட்டு பகுதியை சேர்ந்த ஆனந்த் கன்பியூசியஸ் விஜய் (வயது 32) என்பவராவார்.

இந்த விபத்தில் மோட் டார் சைக்கிளில் பயணித்த இளை ஞர் வீதியில் தூக்கி வீசப்பட்ட நிலையில், படுகாயமடைந் தார். அவரை வீதியால் சென்றவர்களின் உதவியுடன் அம்புலன்ஸ் மூலம் மன்னார் மாவட்ட பொது மருத்துவ மனையில் சேர்ப்பித்தனர்.

எனினும் அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
30.12.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல் கூட்டணிகளுக்கான காலம்?

தென்னிலங்கையில் அரசியல் கூட்டுகள் தொடர்பான பேச்சுகள் தீவிர மடைந்திருக்கின்றன. நாடு தேர்தலொன்றை எதிர்கொள்ளலா மென்னும் எதிர்பார்ப்புக்களின் மத்தியில்தான் அரசியல் கூட்டணிகள் பற்றி தென்னிலங்கை கட்சிகள் உஷாராகியிருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் சிதறியிருக்கும் அனைவரும் தங்களை கூட்டணிகளாக மாற்றிக் கொள்வதில் ஈடுபட்டிருக்கின்றனர். இவ்வாறான கூட்டணிகள் இரண்டு அல்லது அதற்கு மேலும் செல்லக்கூடும். கோட்டாபயவின் வீழ்ச்சியை தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் பலமான கூட்டு சிதறியது. தென்னிலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய நிலையில் இல்லை. தங்களை அரசியல் கூட்டணிகளாக்கிக் கொள்வதை தவிர, அவர்களுக்கு வேறு தெரிவுகளும் இல்லை. அரசியல் கூட்டணியாக்கிக் கொண்டால் மட்டுமே அவர்களால் தேர்தலில் வெற்றிபெறவும் முடியும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தாலும்கூட அவரின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பலவீனமான நிலையிலேயே இருக்கின்றது. ரணில் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்றால், அவருக்கு நிச்சயமாக பல கூட்டணிகளின் ஆதரவு நிச்சயம் தேவை. ஒரு தேர்தல் இடம்பெற்றால் மட்டும்தான் எந்தக் கூட்டணி பலமான நிலையில் இருக்கின்றது என்பதை அறியலாம். அதுவரைக்கும் அனைத்துமே எதிர்பார்ப்புக்கள் மற்றும் ஊகங்களாகவே இருக்க முடியும். ஏனெனில், அந்தளவுக்கு தென்னிலங்கை அரசியல் கட்சிகள் சிதறியிருக்கின்றன. பிரதான கட்சியென்று சொல்லக் கூடிய நிலையில் எவருமே இல்லை. ஒப்பீட்டடிப்படையில் பஸில்-மகிந்த தலைமையிலான பொதுஜன பெரமுன மற்றும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவையே பிரதான கட்சிகளாகத் தெரிகின்றன. ஆனாலும், இந்தக் கட்சிகளாலும் பல கட்சிகளுடனான கூட்டில்லாமல் நகர முடியாது.

இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தலில் எவர் போட்டியிட வேண்டுமானாலும்கூட அவர்களுக்கு அரசியல் கூட்டணிகளின் ஆதரவு கட்டாயமானது. ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில் அவர், ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து நகர்வதாகவே தெரிகின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், தேசிய பிரச்னையை தீர்க்கப் போவதான கருத்துகளையும் வெளியிட்டு வருகின்றார். ரணில் தேர்தல் மூலம் ஜனாதிபதியாக வர வேண்டுமானால் நிச்சயம் அவருக்கு தமிழரின் ஆதரவு தேவை. இதே போன்று வேறு ஒருவர் வரவேண்டுமானாலும் அதற்கு தமிழ் மக்களின் ஆதரவு தேவை. தமிழ் ஜனநாயக அரசியலை பேரம் பேசுவதற்கு பயன்படுத்துவதற்கான அரிய சந்தர்ப்பமாகும். தமிழ்த் தேசிய கட்சிகள் இதனை உச்சபட்சமாக பயன்படுத்தினால் பல விடயங்களை சாதிக்க முடியும். அதற்கு - முதலில், தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களை ஒரு பரந்தளவிலான அரசியல் கூட்டணியாக்கிக் கொள்ள வேண்டும்.

பாராளுமன்ற தேர்தலில் அதிகூடிய ஆசனங்களை பெற வேண்டும். முடிந்தால் வடக்கு - கிழக்கின் அனைத்து தமிழ் ஆசனங்களையும் வெற்றி கொள்ள வேண்டும். ஜனநாயக அரசியல் தளத்தில் ஒரு தரப்பு பேரம்பேசுவதற்கு உள்ள ஒரேயொரு வாய்ப்பு அவர்களிடமுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை மட்டுமேயாகும். கடந்த தேர்தலில் தங்களுக்குள் பிளவுற்றதால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மோசமான பின்னடைவுகளை சந்தித்திருந்தது. தேர்தலை அனைவரும் ஓரணியாக எதிர்கொள்ளாது விட்டால் அடுத்த தேர்தலிலும் அவ்வாறானதொரு சூழலே ஏற்படும்.

தென்னிலங்கை கட்சிகள் தங்களை கூட்டணியாக்கிக் கொள்வதற்கு முயற்சிக்கின்ற சூழலில் தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களுக்குள் பிளவுறுமாக இருந்தால் அது தமிழர்களின் பேரம்பேசும் பலத்தை மோசமாகப் பாதிக்கும். மேலும், இவ்வாறான சூழல் தொடருமென்றும் கூறிவிட முடியாது. எதிர்பாராமல் ஏற்படும் சம்பவங்கள் ஒட்டுமொத்த அரசியல் சூழலையும் தலைகீழாக மாற்றிவிடலாம். உதாரணமாக ஈஸ்டர் தாக்குதல். எனவே, தற்போதுள்ள சூழலை உச்சபட்சமாக கையாளுவதற்கான பொறிமுறை ஒன்று தொடர்பில் மட்டுமே தமிழ்த் தேசியக் கட்சிகள் சிந்திக்க வேண்டும். நிலைமைகள் மாறினால் இப்போது அரசியல் தீர்வு பற்றி பேசும் ரணில் விக்கிரமசிங்கவும் அமைதியடைந்து விடலாம். மீண்டும் தமிழர்களே நடுவீதியில் விடப்படுபவர். அப்போது எந்தவொரு நாடும் தமிழர்களுக்காக நிற்கப் போவதில்லை. காலத்தை தறவிட்டுவிட்டு பின்னர் புலம்புவதில் பயனில்லை.

# தமிழ் அரசியல் கைதிகளை பேச்சுக்கு முன் விடுவிக்குக!

## வலியுறுத்துமாறு மாவையிடம் மனு

*யாழ்ப்பாணம், டிசெ. 30*



தமிழ் மக்களின் இனப் பிரச்னைக்கு தீர்வை எட்டும் விதமாக தமிழ் கட்சிகளுடன் அரசாங்கம் பேசி வருகின்றது. முன்னர், ஜனாதிபதி உறுதியளித்தவாறு, இந்தப் பேச்சுக்கு முன்னதாக தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துமாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிடம் மனு ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராடி வரும் குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் நேற்று வியாழக்கிழமை இந்த மனுவை மாவை சேனாதிராசாவிடம் கையளித்தனர்.

சிறையில் உள்ள32 தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தும் இந்த மனுவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கையளிக்கவுள்ளதாகவும் குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் தெரிவித்தனர்.

# கரையொதுங்கிய இந்திய மீனவர்களை மீளவும் தமிழகம் அனுப்ப நடவடிக்கை!

*வடமராட்சி, டிசெ. 30*



ஷபடகு இயந்திரம் பழுதடைந்த நிலையில் தமிழகம் - நாகை மாவட்ட மீனவர்கள் 4 பேர் வடமராட்சி வல்வெட்டித்துறை - ஆதிகோவிலடி கடற்கரையில் ஒதுங்கினர். அவர்கள் பொதுமக்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இவர்களை, மீளவும் தமிழகத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

எல்லைதாண்டி கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்களின் வலைகளை இலங்கை மீனவர்கள் அறுத்து எடுத்து சென்றுள்ளனர். இந்நிலையில் இதனை மீட்பதற்காக தமிழகம் - நாகை மீனவர்கள் இலங்கை மீனவர்களை பின்தொடர்ந்து வந்த நிலையில் படகு இயந்திரம் பழுதடைந்து வல்வெட்டித்துறை - ஆதிகோவிலடி கடற்கரையில் ஒதுங்கினர்.

நாகை மாவட்டம் கோடியக்கரை மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 27ஆம் திகதி மயிலாடுதுறை மாவட்டம் பெருமாள் பேட்டை சேர்ந்த சரவணன், பாண்டியன் உள்ளிட்ட 4 மீனவர்கள் கண்ணாடி இழை படகில் மீன் பிடிக்க கடலுக்கு சென்றிருந்தனர். இவர்கள் நேற்றுமுன்தினம் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை மீனவர்கள் தங்கள் பகுதியில் மீன் பிடிக்கக்கூடாது என விரட்டி அடித்ததுடன் தமது வலைகளை அறுத்து எடுத்துச் சென்றனர் என்று தஞ்சமடைந்துள்ள மீனவர்கள் கூறினர்.


பல இலட்ச ரூபாய் மதிப்பிலான மீன்பிடி வலைகளை இலங்கை மீனவர்கள் எடுத்துச் சென்ற நிலையில் அந்த வலைகளை தேடி யாழ்ப்பாணம் கடற்கரை பகுதிக்கு வந்தபோதே தமது படகில் உள்ள இயந்திரம் பழுதடைந்து தம் தஞ்சமடைந்தனர் என்று கூறியிருக்கின்றனர்.

தஞ்சமடைந்த மீனவர்களை மீட்ட வல்வெட்டித்துறை - ஆதிகோவிலடி மக்கள் அவர்களுக்கு உணவு வழங்கியதுடன் வல்வெட்டிதுறை பொலிஸாருக்கும், இலங்கை கடற்படையினருக்கும் தகவல் வழங்கியதுடன், அவர்களை பாதுகாப்பாக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில் தஞ்சமடைந்த மீனவர்களை உடனடியாக தமிழகத்திற்கு திருப்பி அனுப்ப பொலிஸாருடன் இணைந்து யாழ். இந்திய துணை தூதரகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(ஐ-02)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
காலையில் நீங்கள் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும். மதியத்திற்குள் உங்கள் முயற்சி லாபமாகும். பொருளாதார நிலை சீராகும்.

**இடபம்**
முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். வியாபாரத்தில் இருந்து வந்த தடை விலகும். உங்கள் விருப்பம் நிறைவேறும். உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் மீண்டும் இணையும் நாள்.

**மிதுனம்**
திட்டமிட்ட செயல்களை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடையே செல்வாக்கு அதிகரிக்கும். பழைய பிரச்னை ஒன்றுக்கு தீர்வு காண்பீர்கள். தொழிலில் திட்டமிட்ட லாபம் காண்பீர்கள்.

**கடகம்**
உங்கள் எதிர்பார்ப்பு மதியத்திற்கு மேல் நிறைவேறும். பணிபுரியும் இடத்தில் நிதானம் தேவை. மறைமுக எதிர்ப்புகளால் நெருக்கடி தோன்றும். அதை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**சிம்மம்**
இன்று மதியம் வரை உங்களுடைய எண்ணம் பூர்த்தியாகும். மகிழ்ச்சியான நாள்.குடும்பத்தில் ஏற்பட்ட சங்கடம் விலகும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். விழிப்புணர்வு தேவை.

**கன்னி**
உங்கள் முயற்சி இன்று வெற்றியாகும்.பணிபுரியும் இடத்தில் உண்டான தடை அகலும். வருமானம் அதிகரிக்கும்.மறைமுக எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்**
நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். பணியிடத்தில் பொறுப்பு கூடும். சொத்துப்பிரச்னையில் வெற்றி பெறுவீர்கள்.

**விருட்சிகம்**
உழைப்பிற்கு ஏற்ற லாபம் காண்பீர்கள். தொழில் நிலையில் திருப்தி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. வேலைத்தேடி வந்தவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**தனுசு**
குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.வியாபாரத்தில் ஏற்பட்ட தடை நீங்கும். லாபம் உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.எதிர்பார்த்த பணம் வரும்.

**மகரம்**
தம்பதிகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வர். தடைபட்டிருந்த வருமானம் மீண்டும் வரும். குடும்பத்தினர் விருப்பப்படி புதிய பொன்,பொருள் வாங்குவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கும்பம்**
பொறுமை அவசியம்.வியாபாரத்தில் உங்கள் எதிர்பார்ப்பு தள்ளிப் போகும். நெருக்கடி அதிகரிக்கும்.விழிப்புடன் செயல்பட்டு வெற்றி அடையும் நாள். செயல்களில் கவனம் தேவை.

**மீனம்**
மதியம் வரை புதிய முயற்சி வேண்டாம். செலவுகள் அதிகரிக்கும் நாள்.மதியத்திற்கு மேல் நெருக்கடி குறையும். யாரிடமும் விவாதம் வேண்டாம். மதியத்திற்கு மேல் உங்கள் மனம் மகிழும் படியான செயல் உண்டாகும் நாள்.

# கோவை காரில் சிலிண்டர் வெடிப்பு; மேலும் இரு சந்தேகநபர்கள் கைது

கோவை, டிசெ. 30

கோவை கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவம் தொடர்பாக மேலும் இருவரை தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ) பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

கோவை கோட்டைமேடு சங்கமேஸ்வரர் கோயில் அருகே, கடந்த ஒக்ரோபர் 23ஆம் திகதி காரில் சிலிண்டர் வெடித்தது. காரை ஓட்டி வந்த கோட்டைமேடு ஜமேஷா முபின் (25) உயிரிழந்தார். அவரது வீட்டில் இருந்து நாட்டு வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படும் இரசாயனப் பொருட்கள், ஐ. எஸ். பயங்கரவாத அமைப்பு தொடர்புடைய தடயங்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர், இவ்வழக்கு என். ஐ. ஏவுக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கில் இதுவரை கைது செய்யப்பட்டுள்ள 9 பேரில், 5 பேரை என். ஐ. ஏ. பொலிஸார் தமது காவலில் எடுத்து கடந்த 20ஆம் திகதி முதல் விசாரணை நடத்தினர். அவர்களை கோவைக்கு அழைத்து வந்து சமீபத்தில் 2 நாட்கள் விசாரணை நடத்தினர். இந்நிலையில், இந்த வழக்கில் மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கார் சிலிண்டர் வெடிப்பு தொடர்பாக கோவையைச் சேர்ந்த ஷேக் இதாயத்துல்லா, சனோபர் அலி ஆகியோர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவத்தில் முக்கிய நபராக முபின் செயல்பட்டார். அவருடன் இணைந்து கைது செய்யப்பட்ட மற்றவர்கள் சதித் திட்டங்களில் பங்கேற்றுள்ளனர்.

தற்போது கைது செய்யப்பட்ட ஷேக் இதாயத்துல்லா, சனோபர் அலி ஆகியோர் கடந்த பெப்ரவரி மாதம் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வனப்பகுதியில் உள்ள ஆசனூர் மற்றும் கடம்பூர் பகுதிகளிலும், வனப்பகுதியின் உட்பகுதிகளிலும் நடைபெற்ற சதித் திட்ட ஆலோசனையில் பங்கேற்றுள்ளனர்.

இந்தக் கூட்டங்கள், இவ்வழக்கில் முன்னரே கைது செய்யப்பட்டஉமர் பாரூக் தலைமையில் நடைபெற்றது. குறிப்பாக, உயிரிழந்த ஜமேஷா முபின், முகமது அசாருதீன், ஷேக் ஹிதாயத்துல்லா, சனோபர் அலி ஆகியோர் பயங்கரவாத செயல்களுக்குத் தயாராகி அதைச் செயல்படுத்த சதி ஆலோசனைகளை நடத்தியுள்ளனர். கைதானவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அ. தி. மு. கவில் இணையும் தவறை என்றைக்கும் நான் செய்யமாட்டேன்!

## டி. டி. வி. தினகரன்

சென்னை, டிசெ. 30

"அ. தி. மு. கவை மீட்டெடுக்கும் இலக்கை அடையும் அடையும் நாங்கள் போராடுவோம்" என்று அ. ம. மு. க. பொதுச் செயலாளர் டி. டி. வி. தினகரன் கூறியுள்ளார்.

நேற்று அவரின் பணிமனையில் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், "அ. தி. மு. க. இன்று தவறானவர்கள் கைகளில் இருக்கிறது. எனவே தான், அ. ம. மு. கவை ஆரம்பித்த அன்றே சொன்னேன், அ. தி. மு. க. பி.எஸ்.வீரப்பா, எம். என்.நம்பியாரின் கைககளில் எம். ஜி ஆரின் கட்சியும், சின்னமும் உள்ளன என்று கூறினேன்.

அதை மீட்டெடுப்பதற்காகத்தான், இலட்சக்கணக்கான தொண்டர்கள் என்னை தளபதியாக நியமித்து அ. ம. மு.



கவின் பொதுச் செயலாளராக நியமித்து செயல்பட வைத்துள்ளனர். இந்த இலக்கை அடையும் வரை போராடுவோம். காரணம், தேர்தல் பின்னடைவு ஏற்படுவதால் எங்களால் அதை அடைய முடியவில்லை. ஆனால், எங்களது இலக்கில் இருந்து என்றைக்கும் நாங்கள் விலக மாட்டோம்.

நான் அ. தி. மு. கவுடன் இணைவதற்கு வாய்ப்பே இல்லை. அந்தத் தவறை நாங்கள் என்றைக்கும் செய்யமாட்டோம். கூட்டணிக்கு செல்வீர்களா? என்று கேட்கப்படுகிறது. கூட்டணி என்பது, தேர்தல் நேரத்தில், தி. மு. கவை வீழ்த்த வேண்டும் என்பதால் எங்களுடைய பலமும், எங்களுடைய உயரமும் எங்களுக்கு தெரியும். சில பேரைப் போன்று, ஆணவத்தில், அகம்பாவத்தில், பணத் திமிரில், எங்களுடைய நடவடிக்கை இருக்காது.

அ. ம. மு. க. வளர்ந்து வருகின்ற ஓர் இயக்கம். வரும் காலத்தில் ஜெயலலிதாவின் ஆட்சியை தமிழ்நாட்டில் நிச்சயம் ஏற்படுத்தக் கூடிய உறுதியான தொண்டர்களின் இயக்கம். அதை அடையும் வரை போராடுவோம் - என்றார். (ஐ)

# இந்த ஆண்டில் ஒரு கோடி பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கினேன்!

## முதலமைச்சர் ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, டிசெ. 30

2022ஆம் ஆண்டில் 8,549 கிலோ மீற்றர் பயணம் செய்து ஒரு கோடி பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கினேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

திருச்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின், தான் 2022ஆம் ஆண்டு செய்த பயணங்கள் தொடர்பாக பேசினார். இதன் விவரம்,

"நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) நான் மாலையில் என் இல்லத்தில் அமர்ந்திருந்த நேரத்தில், என்னுடைய உதவியாளர்கள் ஒரு தாளை கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார்கள். என்ன என்று படித்துப் பார்த்தேன். கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும்



நான் தமிழகத்தில் இருக்கக் கூடிய மாவட்டங்களில் பயணம் செய்தது, 8,549 கிலோ மீற்றர் தூரம். அந்தப் பயணத்தில் நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்- 647. இதில் 551 நிகழ்ச்சிகள் அரசு நிகழ்ச்சிகள். கட்சி நிகழ்ச்சிகள்- 96.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட காரணத்தால், அதில் பயனடைந்தவர்கள் எவ்வளவு தெரியுமா? ஒரு கோடியே 3 லட்சத்து, 74 ஆயிரத்து 355 நபர்கள். ஓராண்டு காலத்தில் ஒரு கோடி பேருக்கு நேரடியாக நலத்திட்ட உதவிகள் சென்று சேர்ந்திருக்கிறது. இதெல்லாம் ஒரு வருடத்தில். இதற்கு மத்தியில், எனக்கு கரோனா பாதிப்பு வந்தது, சிறிது உடல் நலிவுற்றேன், கால் வலி வந்தது, சிகிச்சை எடுத்துக் கொண்டேன்.

அந்தச் சூழ்நிலையில் கூட என்னுடைய பயணம் தடைபடவில்லை, மக்கள் பணி நிற்கவில்லை, நிற்கவில்லை என்பதல்ல நிற்கவே நிற்காது. அதுதான் உண்மை - என்றார். (ஐ)

# அவசர மருந்து கொள்வனவில் விதிமுறைகளை மீறவில்லை!

## அமைச்சர் கெஹலிய விளக்கம்



கொழும்பு, டிசெ. 30

அவசரகால மருந்துகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளின்போது அவசர கால கொள்முதல் விதிமுறைகளை மீறவில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபையின் அங்கீகாரம் பெறாத நிறுவனங்களில் இருந்து கேள்வி கோராமல் மருந்துகளை இறக்குமதி செய்வதாக முன்னிலை சோசலிசக் கட்சி குற்றம் சுமத்தியிருந்தது.

இந்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும்போதே சுகாதார அமைச்சர் இவ்வாறு கூறினார். (அ)

# மாணவர்களுக்கு போதை மாத்திரை விற்ற 19 வயது வியாபாரி சிக்கினார்!

## யாழ். குற்ற தடுப்பு பொலிஸார் கைது செய்தனர்

யாழ்ப்பாணம், டிசெ.30

**யாழ்ப்பாணத்தில் 5 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் 19 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார்.**



யாழ்ப்பாணம் ஆறுகால்மடப் பகுதியை சேர்ந்த இளைஞரே இவ்வாறு யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப் படையில் மேற்கொண்ட சோதனையில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை மையப்படுத்தி, இந்த போதைப் பொருள் வியாபாரத்தை முன்னெடுத்து வந்ததாக கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞனை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# தினேஷ் ஷாப்டரின் மரணம் 90 பேரின் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, டிசெ. 30

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் இதுவரை 90 பேரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பல பிரிவுகளின் ஊடாக இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கும் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கும் இடையில் நேற்று முன் தினம் புதன்கிழமை பிற்பகல் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மரணம் தொடர்பிலான விசாரணைகள் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து பொலிஸ் மா அதிபர் அவர்களிடம் கேட்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், விசாரணையில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பொலிஸ் மா அதிபர் அவர்களிடம் உண்மைகளை விளக்கியிருந்தார். (அ)

# போலித் தகவல்கள் ஊடாக வெளிநாடு செல்வதை தடுப்பதற்கு விசேட திட்டம்

கொழும்பு, டிசெ. 30

போலியான தகவல்கள் ஊடாக வெளிநாட்டு வேலைக்குச் செல்வதை தடுக்கும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கும் ஆட்பதிவு திணைக்களத்துக்கும் இடையில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் பல்வேறு காரணங்களை முன்வைத்து தனிப்பட்ட தகவல்களை மாற்றிக்கொள்வதாக எழுந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் அதனைத் தடுக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்படி, சந்தேகத்திற்கிடமான நபர்களின் தகவல்களை உடனுக்குடன் சரிபார்ப்பதற்காக, ஆட்பதிவுத் திணைக்களத்தின் கணினிமயமாக்கப்பட்ட தரவு அமைப்பைப் பயன்படுத்த இந்த ஒப்பந்தம் உதவுகிறது. (அ)

# சீன உலர் உணவுப் பொதிகள் யாழ். மக்களுக்கு விநியோகம்



யாழ்ப்பாணம், டிசெ. 30

சீன மக்களினால் இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகளில், யாழ்ப்பாண மக்களுக்கான நிவாரண பொதிகள் நேற்று வியாழக்கிழமை யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனாவின் பிரதித் தூதர் ஹூ வெய் கலந்துகொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கினார்.

யாழ்.மாவட்டத்தில் 1320 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் முதல் கட்டமாக நேற்று யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட 100 பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். மாவட்ட செயலர் க.மகேசன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, சீனத் தூதரக அரசியல் விவகார அதிகாரி, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் மாவட்டத் தலைவர் கே.பாலகிருஸ்ணன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (அ)

# 22 வயதுப் பெண் ஒருவர் கிளிநொச்சியில் கடத்தல்

கிளிநொச்சி, டிசெ. 30

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உதய நகர் பகுதியில் வாசித்து வரும் 22 வயதுப் பெண் ஒருவரை ஆறு பேர் கொண்ட குழு நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை ஓட்டோவில் கடத்திச் சென்றுள்ளது.

உதயநகர் பகுதியில் வசிக்கும் குறித்த பெண் ஆண் ஒருவரைக் காதலித்துள்ளார். குறித்த காதலன் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனத் தெரிந்த நிலையில் அவரைத் திருமணம் செய்ய மறுத்து வந்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த குறித்த காதலன் போதை தலைக்கேறிய நிலையில் குறித்த யுவதியின் வீட்டுக்குள் அடாவடிக் கும்பலுடன் புகுந்து தாய் மற்றும் தம்பியை தாக்கிவிட்டு யுவாதியை ஓட்டோவில் இழுத்துச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.(அ)

# தொற்றுநோய் அபாயத்தைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் குறித்து மன்னாரில் ஆராய்வு



மன்னார், டிசெ. 30

மன்னார் மாவட்டத்தில் தொற்று நோய் அபாயத்தை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் குறித்து ஆராய சுகாதார அமைச்சின் விசேட குழுவொன்று மன்னார் விஜயம் செய்துள்ளது.

இதன்படி, அங்கு தொற்று நோய் அபாயத்தை கட்டுப்படுத்தும் வேலைத் திட்டம் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்து காணப்படும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் இந்தியாவுடனான சட்ட ரீதியற்ற கடல் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்னிலைப்படுத்தி குறித்த தடுப்பு நடவடிக்கை ஆராயும் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் பொது சுகாதார சேவைகள் மேலதிக பணிப்பாளர் வைத்தியர் லக்ஷ்மி சோமதுங்க தலைமையில் உயர்மட்டக் குழுவில் பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர் வைத்தியர் ரசாஞ்சலி கெட்டியாராச்சி, சுகாதார அமைச்சின் முன்னாள் காச நோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர், தற்போதைய நிகழ்ச்சி திட்டச் செயலாளர் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர் காந்தி ஆரியரத்ன,மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் உட்பட மன்னார் மாவட்ட தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு வைத்தி யர்கள் மற்றும் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு இணைந்து பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர்கள் இதில் கலந்து கொண்டனர். (அ)

# ஜனவரி மாத இறுதியில் கறுப்பு போராட்ட வாரம்

*மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு*

கொழும்பு, டிசெ.30

அரசாங்கத்தின் தன்னிச்சையான வரி திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஜனவரி இறுதி வாரத்தை கறுப்பு போராட்ட வாரமாக பிரகடனப்படுத்தவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு அதிக வரிகளை அறவிட அரசாங்கம் தீர்மானித்ததன் காரணமாக தொழில் வல்லுநர்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருவதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் 20,000 வைத்தியர்களிடம் மனுவொன்று சேகரிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி ஜனவரி 10ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட மனு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது. (அ)

# தேர்தல் நடத்தப்பட்டால் நெருக்கடி மோசமாகும்!

*நிதி அமைச்சு எச்சரிக்கை*

கொழும்பு, டிசெ.30

**அரச ஊழியர்களின் சம்பளம் ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகளை மட்டுமே அரசாங்கத்தினால் வழங்கக்கூடியதாக இருப்பதாக நிதி அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.**

இந்தச் சூழலில் தேர்தல் நடத்தப்பட்டால் பொருளாதார நெருக்கடி மோசமடைந்து நாடு மீள முடியாத நிலைக்கு தள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய நிதி நெருக்கடியைத் தீர்க்க முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் அதன் பெறுபேறுகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் பெறமுடியும் என அவர் கூறினார்.

இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தலுக்குப் பணம் ஒதுக்க முடியாது. பணம் ஒதுக்கவேண்டுமானால் கடந்த 06 மாதங்களில் பொருளாதாரத்தை மீட்பதற்கான வேலைத் திட்டம் அழிந்து நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மின்னொழுக்கினால் தீப்பற்றி எரிந்த வீடு!



யாழ்ப்பாணம், டிசெ. 30

ஊரெழுப் பகுதியில் நேற்று முன் தினம் மதியம் வீடு ஒன்று மின்சாரக் கசிவு காரணமாக திடீரென தீ விபத்து ஏற்பட்டு முற்றாக எரிந்து சேதமடைந்தது.

வீட்டு உரிமையாளர்கள் இல்லாத நேரத்தில் அவர்களின் உடைகள், உடைமைகள், புத்தகங்கள், பாத்திரங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

வீடு தீப்பற்றி எரிந்ததையடுத்து அயலில் உள்ளவர்கள் சுமார் மூன்று மணித்தியாலப் போராட்டத்தின் பின்னர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன், இச்சம்பவம் குறித்து மின்சார சபையினரிடம் தெரியப்படுத்தினர். (அ)

# இலங்கைக்கான விமான சேவையை ஆரம்பித்தது ரஷ்யாவின் ரெட் விங்ஸ்




கொழும்பு, டிசெ. 30

ரஷ்யாவின் “ரெட் விங்ஸ்” விமான நிறுவனம் இலங்கைக்கான விமான சேவையை நேற்று ஆரம்பித்துள்ளது.

அதன்படி, 398 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு அந்த விமான சேவைக்குச் சொந்தமான விமானம் நேற்றுக் காலை மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தது என தெரிவிக்கப்பட்டது.

“ரெட் விங்ஸ்” விமான நிறுவனம் மத்தள விமான நிலையத்திற்கு வாரத்திற்கு இரண்டு முறை விமான சேவையை முன்னெடுக்கவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# 10 துப்பாக்கி தோட்டாக்களுடன் அமெரிக்க பிரஜை கைதானார்

கொழும்பு, டிசெ. 30

இந்தியா செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அமெரிக்கப் பயணி ஒருவர் நேற்று முன் தினம் இரவு விமானப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரிடமிருந்து 9 மில்லிமீற்றர் ரக 10 துப்பாக்கி தோட்டாக்களும் மகசின் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபரான அமெரிக்கப் பிரைஜை, பெண்ணொருவருடன் நேற்று முன்தினம் இரவு 8.25 மணிக்கு சென்னை செல்ல விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளார்.

விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் உள்ள ஸ்கிரீனிங் இயந்திரம் வழியாகச் சென்றபோது, குறித்த நபரிடம் மேற்படி வெடி பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, அவர் விமானப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகத்திற்குரிய பயணி மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவருடன் வந்த பெண்ணை நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அனுமதி வழங்கியதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# பேராதனை பல்கலை. மாணவத் தலைவர்கள் இருவரின் மாணவர் அந்தஸ்து இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ. 30

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தலைவர் உட்பட இருவரது மாணவர் அந்தஸ்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளவர்கள் தற்போதைய பிரதான மாணவர் சங்கத் தலைவர், முன்னாள் மாணவர் தலைவர் ஆகியோர் என பல்கலைக்கழக பதில் உபவேந்தர் டெரன்ஸ் மௌஜித் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், பூகற்பவியல் பேராசிரியருமான அத்துல சேனாரத்னவையும் அவரது குடும்ப அங்கத்தவர்களையும் தாக்கி அவர்களது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்குள் சட்டவிரோதமாக உட்புகுந்து கலகம் விளைவித்த சம்பவத்துக்கும், மேற்படி இரு மாணவர்களுக்கும் தொடர்பு உள்ளதாகக் காணப்பட்டதை அடுத்தே பல்கலைக்கழக நிர்வாகம் மேற்படி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர் சங்கத் தலைவர் சமோதி சந்சர மற்றும் முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் அனுராதா விதானகே ஆகியோரின் மாணவர் அந்தஸ்தே இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

அதே நேரம் ஏற்கனவே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள 12 மாணவர்களும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து ஜனவரி 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# மின் கட்டணம் செலுத்துவதாக கூறி ரூ.10 கோடி மோசடி செய்தவர் கைது

கொழும்பு, டிசெ. 30

மின்கட்டணம் செலுத்துவதாக தெரிவித்து 10 கோடி ரூபா மோசடி செய்த இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம், சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கசினோ விளையாட்டுகளுக்கு அதிக அடிமையாக இருந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த இளைஞன் கொழும்பில் உள்ள பிரபல கிளப் ஒன்றுக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணையின்போது, இராணுவ விசேட அதிரடிப்படையில் இருந்து தப்பிச் சென்றவர் என தெரியவந்துள்ளது.

மேலும், கசினோ கிளப்களுக்கு வருகை தரும் வர்த்தகர்களின் மின் கட்டணத்தைச் செலுத்துவதாக கூறி ஏமாற்றி வந்துள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலட்சக்கணக்கான ரூபா மின்சாரக் கட்டணம் பெற்றவர்களை குறிப்பிட்ட கையடக்கத் தொலைபேசி விண்ணப்பம் மூலம் செலுத்தினால் 20 வீதம் தள்ளுபடி பெற்றுக் கொள்ளலாம் என கூறி மோசடி செய்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

சந்தேக நபர் இணையம் மூலம் பணம் பெற்று மின்கட்டணத்தைச் செலுத்தியதைச் சரிபார்க்கும் வகையில், மின்சார சபையின் கட்டணத்தை இணையவழிச் செலுத்தும் மூன்றாம் தரப்பு நிறுவனத்தின் கணக்கை ஹக் செய்துள்ளார்.

மின்சார சபையின் டேட்டா சிஸ்டத்திலும் கட்டணம் செலுத்தப்பட்டதாக புதுப்பிக்கப்பட்டாலும், அதற்கு பணம் மாற்றப்படவில்லை என்று விசாரணை அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேலும் விசாரணையில், இணையத்தளங்களை ஹக் செய்வது எப்படி என்பதை அவரே கற்றுக்கொண்டது தெரியவந்துள்ளது.

60 இலட்சம் ரூபாவுக்கு மேல் மோசடி செய்துள்ளதாகவும், அந்தப் பணத்தில் கசினோ விளையாட்டில் ஈடுபட்டதாகவும் அவர் ஒப்புக்கொண்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக ஊடக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபருடன் தொடர்புடைய மேலும் பல தரகர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# பெலியத்தை பிரதேச சபையின் தலைவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, டிசெ. 30

பெலியத்த பிரதேச சபைத் தலைவர் சிறில் முனசிங்க கைது செய்யப்பட்டுள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

நீர் குழாய்களை லொறி ஒன்றில் நள்ளிரவில் எடுத்துச் செல்ல முயன்ற குற்றச்சாட்டின் கீழ் அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

கைதான நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# மார்ச் 10 இற்கு முன் உள்ளூராட்சி தேர்தல்

கொழும்பு, டிசெ. 30

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அத்துடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனு கோரல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

# ரஷ்ய சுற்றுலாப் பயணி சடலமாக மீட்கப்பட்டார்

கொழும்பு, டிசெ. 30

வீடொன்றில் அறையை வாடகைக்கு எடுத்து அங்கு வசித்து வந்த ரஷ்ய சுற்றுலாப் பயணியின் சடலம் அறையின் கட்டிலில் கிடந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது என வெலிகமை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடந்துள்ளது. வெலிகமை பொலிஸ் பிரிவில் காலி-மாத்தறை பழைய வீதியில் உள்ள வீடொன்றில் அறையை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்த 32 வயதான ரஷ்ய நாட்டவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பில் வெலிகமை பொலிஸ் நிலையத்திற்கு 119 பொலிஸ் அவசர அழைப்பு இலக்கம் ஊடாக வீட்டின் உரிமையாளர் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து அங்கு சென்ற வெலிகமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் உடலை மீட்டுள்ளதுடன் திடீர் மரண விசாரணை அதிகாரி மருத்துவர் எம்.எம்.அமரஜீவவுக்கு அறிவித்துள்ளனர்.

மரணத்திற்கான காரணம் குறித்து அறிய சம்பவம் தொடர் பாக வெலிகமை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 1,272 கிலோ பாவனைக்கு உதவாத இந்திய அரிசி வவுனியாவில் மீட்பு

## உடனடி விசாரணைகள் ஆரம்பம்





வவுனியா, டிசெ. 30

வவுனியாவில் பாவனைக்கு உதவாத நிலையில் மீட்கப்பட்ட இந்திய உதவியில் கிடைத்த 1272 கிலோ அரிசி தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா, ஆசிக்குளம் கிராம சேவகர் பிரிவில் உள்ள மதுரா நகர் கிராமத்தில் அரச கட்டடமொன்றின் அறையினுள் இந்தியாவின் தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்ட நிவாரண அரிசிகள் பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் அப்பகுதி மக்களால் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இவ் விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளருக்கு கிராம மக்களால அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று மாவட்ட செயலகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உத்தியோகத்தர்கள், உதவி பிரதேச செயலர் தலைமையில் குறித்த பகுதிக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதேவேளை, குறித்த அரிசியின் நிலை குறித்தும் அது பாவனைக்கேற்றதா என்பதனை ஆராயவும் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் அங்கு பிரசன்னமாகி பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது 1272 கிலோ இந்திய உதவித் திட்டத்தில் கிடைக்கப் பெற்ற அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது.

குறித்த அரிசியை மேலதிக பரிசோதனைகளுக்காக கொண்டு செல்லவேண்டியிருப்பதால் அரிசி முழுவதையும் பிரதேச செயகத்துக்கு கொண்டு செல்ல வேண்டுமென பொதுமக்களிடம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்ததுடன், குறித்த அரிசி தற்போது பயன்படுத்தும் நிலையில் இல்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை, அப்பகுதி மக்களுக்கு கருத்து தெரிவித்த உதவிப் பிரதேச செயலர்,

கிராம உத்தியோகத்தரின் பக்கம் இதில் பிழைகள் இருந்தாலும்கூட பொது அமைப்புகளுக்கு தெரியாமல் இருக்கவில்லை. தனியே அரச உத்தியோகத்தர்கள் வைத்து மட்டும் கிராமத்தை நடத்தவில்லை. அதற்காகவே பொது அமைப்புக்களை தெரிவு செய்கின்றோம். பொது அமைப்புக்களுக்கும் அதற்கான பொறுப்புள்ளது.

தங்கள் மக்களின் பிரச்னையை உரிய தரப்புக்கு எடுத்து கூறியிருக்கவேண்டும். இதற்கான பொறுப்பை பொது அமைப்புக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ரயில் நிலையத்துக்கு வந்த பொருட்களை வாகனங்களில் கிர மங்களுக்கு அனுப்பியபோது மழை காரண மாக அரிசிகள் சில நனைந்தமையால் இந்த இடத்தில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்ததாக கிராம சேவகராலும் கிராம அபிவிருத்திச் சங்கத்தாலும் இப்போது தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்த அரிசி பயன்படுத்தும் நிலையில் உள்ளதா என்பதை பரிசோதிப்பதற்காகவே வந்திருந்தோம். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அறிக்கையின் பிரகாரம் குறித்த அரிசி உடனடியாக பயன்படுத்தக் கூடிய நிலையில் இல்லை என தெரிவித்துள்ளனர்.

இந்த அரிசியை இதே இடத்தில் கழுவி காய வைத்து மீண்டும் வழங்குவதற்கான நிலைக்கு கொண்டு வரலாமாக இருந்தாலும் இவ்விடத்தில் அதற்கான வசதிகள் இல்லை. ஆகவே அதனை எடுத்து சென்று பரிசோதித்து பொது சுகாதாரப் பரிசோதகர்களின் அறிக்கை கிடைத்த பின்னரே மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கலாம்-என்றார். (அ)

# மூன்று முறை சந்திக்க முயன்றும் கூட்டமைப்பு பதிலளிக்கவில்லை!

## யாழ். வந்த சீன பிரதித் தூதுவர் விசனம்



யாழ்ப்பாணம், டிசெ. 30

தமிழ் மக்களுடன் சீனா உறவைப் பேணவில்லையென்ற குற்றச்சாட்டை ஏற்க முடியாது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்திக்க மூன்று முறை அழைப்பு விடுத்தோம். அவர்கள் பதில் கூட அனுப்பவில்லை என இலங்கைக்கான சீனாவின் பிரதித் தூதுவர் ஹூ வெய் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் பயணம் செய்த சீனத் தூதரகக் குழுவினர், அழைக்கப்பட்ட சிலருடன் ஹோட்டல் ஒன்றில் சந்திப்பை நடத்தியிருந்தனர்.

இந்த சந்திப்பில் கலந்து கொண்டவர்கள், சீனா தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டது, தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக உதவவில்லை, தற்போது இந்தியாவுக்கு எதிரான வியூகமாகவே தமிழ் மக்களுடன் நெருங்க முனைகிறது என பலவிதமான கருத்துக்களை தெரிவித்தனர்.

இதனைச் சீன பிரதித் தூதுவர் மறுத்தார்.

சீனத் தூதரகம் கொழும்பில் இருப்பதாகவும், வடக்கில் தமிழ் மக்களை அணுகுவதில் பல தடங்கல்களை எதிர்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், "தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்திக்க நாம் முயன்றோம். ஓரிரண்டு முறையல்ல, மூன்று முறை இரா.சம்பந்தனுக்கு அழைப்பு விடுத்தோம். அவரது வீட்டுக்கு வந்து சந்திக்கிறோம் என்று தான் குறிப்பிட்டோம். அவற்றுக்கு எந்தப் பதிலும் அனுப்பப்படவில்லை" என சீன பிரதித் தூதுவர் தெரிவித்தார். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்

துயர் .நெற் THUYAR.NET

துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்

ஈழநாடு Eelanadu

ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்

DAN news

டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்

விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# தி.மு.க. கூட்டணியை நெருங்குகிறாரா கமல்ஹாசன்?

- முரளிதரன் காசி விஸ்வநாதன்



மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரையில் பங்கேற்றிருப்பது தமிழ்நாட்டில் சில அரசியல் கூட்டணிகளை மாற்றியமைக்கக்கூடும். 2024ஆம் ஆண்டில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் கமல் இடம்பெறுவாரா?

மக்கள் நீதி மய்யத்தின் நிறுவனரும் தலைவருமான கமல்ஹாசன் டில்லியில் ராகுல் காந்தி மேற்கொண்டுவரும் இந்திய ஒற்றுமை யாத்திரையில் பங்கேற்றார். டில்லி செங்கோட்டையில் நடந்த நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு பேசினார். அவரது பேச்சு தேசிய அளவில் கவனிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது, 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது, தமிழ்நாட்டில் காங்கிரஸ் இடம்பெற்றுள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யமும் இடம்பெறக்கூடும் என்ற பேச்சுகள் எழுந்துள்ளன.

நடிகர் கமல்ஹாசன் கடந்த 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மக்கள் நீதி மய்யத்தை மதுரையில் நடந்த ஒரு விழாவில் துவக்கினார். 2019ஆம் ஆண்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 37 இடங்களில் போட்டியிட்ட இந்தக் கட்சி, சுமார் 3.78 சதவீத வாக்குகளைப் பெற்றது. தொடர்ந்து 2021ஆம் ஆண்டில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் 154 இடங்களில் போட்டியிட்ட மக்கள் நீதி மய்யம், எந்த இடத்திலும் வெற்றி பெறவில்லை. ஒட்டுமொத்தமாக 2.62 சதவீத வாக்குகளைப் பெற்றது.



இதற்குப் பிறகு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் இக்கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்கள் ஆங்காங்கே வெற்றி பெற்றாலும் குறிப்பிடத்தக்க வெற்றி எதையும் அக்கட்சியால் பெற முடியவில்லை. சட்டமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகே, அக்கட்சியிலிருந்து பலரும் வெளியேற ஆரம்பித்தனர். அக்கட்சியின் துணைத் தலைவராக இருந்த டாக்டர் மகேந்திரன், அங்கிருந்து விலகி தி.மு.கவில் இணைந்தார்.

இதற்குப் பிறகு சிறிது காலத்திற்கு, கட்சியில் சோர்வு ஏற்பட்டிருந்ததும், விக்ரம் படத்திற்குக் கிடைத்த பிரமாண்டமான வெற்றியும் அவர் அரசியலில் தொடர்வாரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தன. ஆனால், சில மாதங்களுக்கு முன்பிருந்து, மீண்டும் கட்சியினரைச் சந்தித்து கூட்டங்களை நடத்த ஆரம்பித்தார் கமல்.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமையன்று பாரத் ஜோடோ யாத்திரையில் அவரும் கட்சியினர் சுமார் 300 பேரும் அந்த யாத்திரையில் பங்கேற்றதும் நாடாளுமன்றத் தேர்தல் வரும்வரை, மாதம் தோறும் நிகழ்ச்சிகளையோ கூட்டங்களையோ நடத்த அக்கட்சி முடிவுசெய்திருப்பதும் தொண்டர்களுக்கு பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கட்சி ஆரம்பித்தபோது, இரு திராவிடக் கட்சிகளிடமிருந்தும் விலகியே தனது அரசியல் பாதையை வகுத்துக் கொண்டார் கமல். தேர்தல் சமயத்தில் தி.மு.க. மீது கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்தார். ஆனால், தற்போது மக்கள் நீதி மய்யம் தொடர்ச்சியாக காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியுடன் நெருங்கி வருவதைப்போலத் தோன்றுகிறது. குறிப்பாக, தி.மு.கவுடன் நெருங்கி வருவதைப் போன்ற தோற்றம் ஏற்பட்டிருக்கிறது.

ஆறு பேர் விடுதலையில் ஆளுநரை விமர்சனம் செய்தது, உதயநிதி ஸ்டாலினின் பிறந்த நாளுக்கும் அவர் அமைச்சராகப் பதவியேற்றதற்கும் வாழ்த்துத் தெரிவித்தது என ஒரு சுமுகமான உறவையே பேணிவருகிறார் கமல்.

இந்த நிலையில்தான் கமல் தி.மு.க. கூட்டணியில் இணைவார் என்ற பேச்சுகள் அடிபட ஆரம்பித்துள்ளன. அந்தக் கூட்டணியில் கமல் இணையும்பட்சத்தில், சென்னையில் ஒரு தொகுதியோ, மாநிலங்கள வையில் ஒரு தொகுதியோ அக்கட்சிக்கு ஒதுக்கப் படலாம். மாநிலம் தழுவிய அளவில் அவர் அந்தக் கூட்டணியின் பிரச்சாரத் திற்குப் பயன்படுத்தப்படலாம்.

கமல்ஹாசனைப் பொறுத்தவரை, இது நல்ல அம்சம்தான் என்கிறார் மூத்த பத்திரிகையாளரான குபேந்திரன்.

‘கமல் தமிழ்நாட்டு அரசியலை இப்போதுதான் சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறார். ரஜினியைப் பொறுத்தவரை, மூன்று முறை சர்வே செய்து பார்த்தார். அதில் வாக்கு சதவீதம் 8ஐத் தாண்டவில்லை. மூன்றாவது முறை மட்டும் சற்று அதிகம் வந்தது. அதனால், அரசியலில் தேவையில்லாமல் சிக்க வேண்டாம் என முடிவெடுத்தார். ஆனால், கமல் அப்படியில்லை. அரசியலுக்கு வந்து, தோல்வியடைந்த பிறகும் தொடர்ந்து நீடித்து வருகிறார். இந்தத் தருணத்தில், அந்தக் கூட்டணியில் இணைவது என்பது அவருக்கு ஒரு வாய்ப்பு. இயல்பாகவே பா.ஜ.க. எதிர்ப்பு மனநிலையில் உள்ள அவர், இந்தக் கூட்டணியில் இடம் கிடைத்தால் நிச்சயம் எம்.பியாகிவிடுவார். அந்தக் கூட்டணியைப் பொறுத்தவரை, தில்லியில் பல மொழிகளில் பேசக்கூடிய ஒரு எம்பி கிடைப்பார்கள். ஆகவே இரு தரப்புக்குமே அது லாபமாக இருக்கும்” என்கிறார் குபேந்திரன்.

ஆனால், மக்கள் நீதி மய்யத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பேச்சுகளை புறம்தள்ளுகிறார்கள். ‘தேர்தலுக்கு இன்னும் வெகு நாட்கள் இருக்கின்றன. தற்போது நாட்டில் நிலவும் அடக்கு முறைக்கு எதிராக, அந்த யாத்திரையில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. கமலும் தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும் நோக்கில்தான் அவர் கலந்துகொண்டார். இந்த விவகாரம் என்பது முற்றிலும் கூட்டணிக்கு அப்பாற்பட்டது” என்கிறார் அக்கட்சியின் நிறுவனப் பொதுச் செயலாளரான அருணாச்சலம்.

காங்கிரஸ் கட்சியும் கமல் யாத்திரையில் பங்கேற்றதை அப்படிப் பார்க்க விரும்பவில்லை என்கிறது. ‘பாரத் ஜோடோவைப் பொறுத்தவரை கூட்டணிக்கான அதனை கூட்டணிக்கான முயற்சியாக பார்க்க முடியாது. இந்தப் பயணத்திற்கு எல்லாவற்றையும் தாண்டிய ஒரு நோக்கம் இருக்கிறது. ஒரு குறுகிய அரசியல் ஆதாயத்திற்குள் இந்தப் பயணத்தின் நோக்கத்தைச் சுருக்க முடியாது. யாத்திரைக்கு நிறையப் பேரை அழைத்திருக்கிறோம். காங்கிரசுடன் கடந்த காலத்தில் உடன்படாதவர்கள்கூட இந்த யாத்திரையின் முக்கிய அங்கமாக இருக்கிறார்கள். பன்முகத் தன்மையுடன் விளங்கிய தேசம், மிக மோசமான நிலைக்குச் சென்றுகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, அன்பையும் சமத்துவத்தையும் ஏற்படுத்த ஒப்புக்கொள்ளும் அனைவரையும் இந்தப் பயணத்திற்காக அழைத்திருக்கிறோம்.

அப்படித்தான் கமல் இதில் கலந்துகொண்டார். இந்த யாத்திரை நெடுக மக்களின் குரலைத்தான் கேட்கிறோம். அரசியல் கூட்டல் கழித்தலுக்காக இது நடக்கிறதென்றால், மற்றவர்கள் ஏன் வருகிறார்கள்? ஆகவே இது தேர்தல் கூட்டணியை முன்வைத்து நடக்கும் யாத்திரையில்லை. பங்கேற்பவர்களும் அப்படிப் பங்கேற்கவில்லை” என்கிறார் கரூர் நாடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினரும் இந்திய ஒற்றுமை பயணத்தில் தொடர்ந்து பங்கேற்பவருமான ஜோதிமணி.

ஆனால், கமல் இந்தக் கூட்டணிக்கு வருவது இரு தரப்புக்குமே நல்லது என்கிறார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான து. ரவிக்குமார். ‘இது இரு தரப்புக்கும் நல்லதாக இருக்கும். தமிழ்நாட்டில் பா.ஜ.கவை எதிர்ப்பவர்கள் எல்லோரும் ஒன்றாக இணைவதுதான் சிறந்தது. அந்த வகையில் கமல் இந்தக் கூட்டணியில் இணைவது நல்ல முடிவாக இருக்கும். அவருடைய கட்சிக்கும் இது ஒரு சிறந்த முடிவாக இருக்கும்” என்கிறார் ரவிக்குமார்.

தற்போதைய யூகங்கள் உண்மையாகும் நிலையில் மக்கள் நீதி மய்யத்தின் எதிர்காலம் என்னவாக இருக்கும்? ‘நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும்போது கமல் 70 வயதை எட்டியிருப்பார். அவருடைய எம்.பி. பதவிக் காலத்திற்குப் பிறகு கட்சி என்னவாக இருக்கும் என்பதை, இப்போதே சொல்வது கடினம்” என்கிறார் குபேந்திரன். 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அக்கட்சி எடுக்கும் நிலைப்பாடுகளும் அக்கட்சி வெல்லும் இடங்களும் ஓரளவுக்கு கட்சியின் எதிர்காலம் குறித்து சில குறிப்புகளைத் தரக்கூடும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர் கட்சி, அமமுக ஆகியவை தனித்தனியாகப் போட்டியிட்டன. ஆனால், இந்த முறை கூட்டணிக் கணக்குகளில் பெரும் மாற்றம் ஏற்படலாம். இந்திய ஒற்றுமைப் பயணம் குறித்தும் அதில் ராகுல் காந்தியின் பேச்சு குறித்தும் சமீபத்தில்கூட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டு பேசிய நிலையில், தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் இப் போதைக்கு சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லை.



ஆனால், அ.தி. மு.க. கூட்டணியில் பா.ஜ.க. தொடர்ந்து நீடிக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். அ.ம.மு.க. கடந்த முறையைப் போலவே தனித்துப் போட்டியிடப் போகிறதா என்பது குறித்தும் தெளிவில்லை. நாம் தமிழர் கட்சி முன்பைப் போலவே தனித்துப் போட்டியிடலாம்.

(பிபிசி)



யதீந்திரா

# அரசியலில் சூழ்ச்சி?

ரணில் விக்கிரமசிங்க நரித்தனமாக தமிழர்களை ஏமாற்றப் போகின்றார். ஜெனிவாவை கையாளும் ஒரு உக்தியாகவே ரணில் ஒரு புதிய ஆட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார். விடயம் தெரியாமல் தமிழ் தலைமைகள் கொழும்பின் பொறிக்குள் சிக்கப்போகின்றன. இதன் மூலம் சர்வதேச அழுத்தங்கள் பலவீனமடையப் போகின்றது. இவ்வாறான கருத்துக்களை சிலர் முன்வைப்பதை காணமுடிகின்றது. அரசாங்கத்துடன் பேசுகின்ற ஒவ்வொரு சந்தர்பங்களிலும் இவ்வாறான கருத்துக்கள் வெளிவருவது சாதாரணமானது. ஒரு நம்பிக்கையற்ற சூழலில் இடம்பெறும் அனைத்துமே அவநம்பிக்கையினூடாகத்தான் நோக்கப்படும்.

அவ்வாறாயின் ரணில் சூழ்ச்சி செய்ய மாட்டாரா? இப்படி எவரேனும் கேட்டால் - பதில் சுலபமானது. அவர் நிச்சயம் சூழ்சிகள் புரிவார். அதில் நாம் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை. ஏனெனில் அரசியல் என்பது எப்போதுமே அரசியல்தான். அரசியலும் சூழ்ச்சியும் பிரிக்கமுடியாதவைகளாகும். அரசாங்கம் - ரணில், சூழ்சிகள் புரிவாரென்றால் அதனை முறியடித்து, தமிழ் மக்களின் நலன்களை வெற்றிகொள்வதுதானே தமிழர்களின் அரசியல் கெட்டித்தனமாக இருக்க முடியும். சிங்கள ஆளும் வர்க்கம் மட்டுமல்ல, உலகில் அனைத்து ஆளும் தரப்புக்களும் சூழ்சிகளுடன்தான் வரும்.

ஒரு அடிப்படையான வேறுபாடுண்டு. நாம் சூழ்ச்சியாக விளங்கிக் கொள்வது, அவர்களது பார்வையில் ராஜதந்திரமாகும். ராஜதந்திர அரசியலை இரத்தமும் சதையுமாக புரிந்து கொள்வதாயின், தந்திரங்கள் இல்லாமல் ராஜ்யங்கள் இல்லை. தந்திரங்கள் இல்லாமல் அரசியலுமில்லை. ராஜ்யங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் தந்திரங்களிலேயே தங்கியிருக்கின்றது. எனவே உணச்சிகளுக்கு பலியாகாமல் விடயங்களை நோக்கப் பழகுவோம்.

முதலில் சர்வதேச அழுத்தங்களை உற்றுநோக்குவோம். இது தொடர்பில் பல்வேறு சந்தர்பங்களில் இந்தக் கட்டுரையாளர் குறிப்பிட்டிருக்கின்றார். உண்மையில் சில விடயங்கள் தமிழ் சூழலில் கூறியது கூறலாகவே இருக்கின்றது. உணர்சிவசப்பட்ட கருத்துக்கள் கூறியது கூறலாக தொடர்வதால், யதாரத்தங்களையும் திரும்பத்திரும்ப அழுத்தி கூறவேண்டியிருக்கின்றது. சர்வதேச அழுத்தங்களை ரணில் பலவீனப்படுத்திவிடுவாரென்று நாம் கூறுகின்ற போது, ஒரு விடயத்தை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

அதாவது, ரணில் பலவீனப்படுத்தக் கூடியளவிற்கு, சர்வதேச அழுதங்கள் பலவீனமாக இருக்கின்றன. அந்தளவிற்கு அவை பலவீனமானவையா? இந்த அடிப்படையில் ஏன் எவரும் சிந்திப்பதில்லை? ரணில் விக்கிரமசிங்க வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள நாடொன்றின் ஜனாதிபதி. வெளிநாடுகளின் உதவிக்காக கையேந்திக் கொண்டிருக்கும் ஒருவர். இவ்வாறான ஒருவரால் பலம்பொருந்திய நாடுகளின் அழுத்தங்களை எவ்வாறு பலவீனப்படுத்த முடியும்? ஈழத் தமிழர்களுக்கு உறுதியானதொரு அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று மேற்குலகம் தீர்மானித்தால் அந்த தீர்மானத்தை ரணில் விக்கிரமசிங்கவினால் என்ன செய்துவிட முடியும்? நிச்சயமாக முடியாது.

எனவே மனித உரிமைசார்ந்த அழுத்தங்களை ரணில் விக்கிரமசிங்க சூழ்சியால் மடைமாற்றிவிட முடியாது. அடுத்தது, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தங்களது சொந்த நலன்களுக்காக காட்டிக்கொடுப்புக்களை செய்கின்றாரென்று எவரேனும் கூற முற்பட்டால், அதுவும் பலவீனமானதொரு வாதமாகும். ஏனெனில் நம் அனைவருக்குமே ஒரு விடயம் தெளிவாகத் தெரியும். கூட்டமைப்பினர், இந்தியாவையும் அமெரிக்காவையுமே நம்பி அரசியல் செய்பவர்கள். அவனின்றி அனுவும் அசையாதென்பது போல், அவர்களின்றி கூட்டமைப்பினர் அசையப் போவதில்லை.

> அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் பேசத்தான் வேண்டும். அதனை கையாளத்தான் வேண்டும். சூழ்சிகளை எதிர்கொள்வதற்கு, சூழ்சியை எதிகொள்ளாமல் தப்பியோடுவது ஒரு உபாயமாகவே இருக்கவே முடியாது.



உண்மையிலேயே சர்வதேச அழுத்தங்களை இறுக்கமாக பேணிக்கொள்ள அந்த நாடுகள் விரும்பினால், கூட்டமைப்பை அவர்கள் அதற்கேற்பவே கையாண்டிருப்பர். அதில் எந்தவொரு தடையுமில்லை. ஆனால் அவர்களோ அரசாங்கத்தோடு பேசுமாறு கூட்டமைப்பை ஊக்குவிக்கின்றனர். இந்தப் பின்புலத்தில் நோக்கினாலும் ரணில் சர்வதேச அழுத்தங்களை பலவீனப்படுத்தவே, கூட்டமைப்புடன் பேசுகின்றாரென்பது, பலவீனமானதொரு வாதமாகும்.

ஏனெனில், விடயங்களை ஆழமாக நோக்கினால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்களை பலவீனப்படுத்துவதற்கான துருப்புச் சீட்டுக்கள் எவையும் ரணிலிடம் இல்லை. ரணிலால் அது முடியாது.

2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர், ரணில் மற்றும் மங்களசமரவீர போன்றவர்களின் திறமையினால் அல்லது கூட்டமைப்பின் சதியால் விடயங்களில் மாற்றங்கள் ஏற்படவில்லை. தங்களுக்கு விருப்பமான ஆட்சியாளர்கள் பலமடைவதற்கும், முன்நோக்கி பயணிப்பதற்குமான கதவை பலம்பொருந்திய நாடுகள் திறந்துவிட்டன. உண்மையில் உள்நாட்டில் முன்னேற்றங்களை காண்பிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கினர்.

ஆனால் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. ஒரு வேளை ரணில்-மைத்திரி அரசாங்கம் முரண்பாடுகளில்லாமல் நகர்ந்திருந்தால், இப்போது நாம் கூறிக் கொண்டிருக்கும் சர்வதேச அழுத்தங்களில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

ஆனாலும் ஒரு குறிப்பிட்டளவில் மனித உரிமைசார்ந்த அழுத்தங்கள் இருந்து கொண்டேயிருக்கும். மனித உரிமைசார்ந்த அழுத்தங்கள் முற்றிலும் இல்லாமல் போய்விடாதென்பது சிங்கள ஆட்சியாளர்களுக்கு தெரியாத விடயமுமல்ல. ஆனால் அந்த அழுத்தங்கள் தங்களால் கையாளக் கூடிய எல்லைக்குள் இருக்க வேண்டுமென்பதுதான் அவர்களது விருப்பமாகும். ஏனெனில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களால் நாடுகளை கட்டுப்படுத்த முடியாது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பலவீனத்தை புரிந்துகொள்வதற்கு, பேரவையின் முன்னைநாள் ஆணையாளர் நவிப்பிள்ளையின் கூற்றே போதுமானது. அதாவது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது, புவிசார் அரசியல் நலன்களாலும் குறுகிய தேசியவாத நலன்களாலும் கட்டுப்படுத்தப் படுகின்றது. இதற்கு தனது சொந்த நாடான தென்னாபிரிக்காவும் விதிவிலக்கல்ல.

இந்த யதார்தங்களை புரிந்துகொள்ளாத வாதங்களால் பயனில்லை. சர்வதேச அரசியல் சூழலை இரத்தமும் சதையுமாக நோக்க வேண்டும். அடிப்படையில் இந்த உலக அரசியல் ஒழுங்கானது, அரசுகளை பாதுகாக்கும் ஒழுங்காகும். இந்த ஒழுங்கில் அரசல்லாதவர்களிடம் என்னதான் நியாயங்கள் இருந்தாலும் கூட, அது சபையேறாது. இதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பே மிகச் சிறந்த உதாரணம்.

விடுதலைப் புலிகள் அமைப்பு மேற்குலகிற்கு எதிரான அமைப்பல்ல. இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புக்களுடன் ஒரு போதுமே விடுதலைப் புலிகள் அமைப்பை ஒப்பிட முடியாது. இது மேற்குலகத்திற்கும் தெரியாத விடயமல்ல. எனினும் விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் யுத்தத்தை நோக்கி நகர்ந்த போது, அதுவரையில் விடுதலைப் புலிகளை கண்டும்காணாமல் விட்டிருந்த ஐரோப்பிய ஒன்றியமும், கனடாவும் விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பின் (பிரபாகரனின்) யுத்த முடிவை மறுபரீசீலனை செய்வதற்கானதொரு அழுத்தமாகவே மேற்படி தடை பிரயோகிக்கப்பட்டது. ஆனாலும் அதனை விடுதலைப் புலிகள் அமைப்பு பொருட்படுத்தவில்லை. ஒட்டுமொத்த மேற்குலகத்தினாலும் எதிர்க்கப்பட்ட பின்புலத்தில்தான், விடுதலைப் புலிகள் யுத்தகளத்தில் நிர்மூலமாக்கப்பட்டனர். மேற்குலகம் ஒட்டுமொத்தமாகவே விடுதலைப் புலிகளுக்கு எதிராக திரும்பிய போது, புலம்பெயர் சமூகத்தினால் அதனை தடுக்க முடியவில்லை.

இந்தக் காலத்தில் மேற்குலக ராஜதந்திரி ஒருவருடன் பேசிய அனுபவத்தை ஒரு நண்பர் பின்னர் பதிவு செய்திருந்தார். அதாவது, மகிந்த ராஜபக்ச அடிப்படையிலேயே மேற்குலகிற்கு எதிரான பார்வைகொண்டவர். அவ்வாறான ஒருவர் முன்னெடுக்கும் யுத்தத்ததை நீங்கள் ஏன் ஆதரிக்கின்றீர்கள்? இதற்கு அந்த ராஜதந்திரியின் பதில், பிரபாகரனை இப்போது மகிந்த பார்த்துக் கொள்ளட்டும் பின்னர் நாம் மகிந்தவை பார்த்துக் கொள்வோம்.

பலம்பொருந்திய நாடுகளின் சிந்தனையை புரிந்துகொள்வதற்கு இது ஒரு சிறந்த கூற்றாகும். ஏனெனில் தங்களது நலன்களை பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்களிடம் பல வழிமுறைகள் உண்டு. இறுதி யுத்தத்தின் போது, பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்படுவர் என்பதை அனைவருமே அறிந்திருந்தனர். உண்மையிலேயே அப்பாவி ஈழத் தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டுமென்று எண்ணியிருந்தால், உலகின் பலம்பொருந்திய நாடுகள் அழிவை தடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறானதொரு யுத்த நிறுத்தம் ஏற்பட்டால் புலிகள் தப்பிவிடுவார்கள் - முக்கியமாக பிரபாரனும் தப்பிவிடுவார் - என்னுமடிப்படையில் தானே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

சாதாரண மக்களின் உயிர்களை கருத்தில் கொண்டு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஏன் இவ்வாறு நடந்தது? ஏனெனில் சாதாரண அப்பாவி ஈழத் தமிழர்களின் உயிர்கள் உலகின் மூலோபாய நலன்களுக்கு தேவைப்படவில்லை. ருவாண்டா இனப்படுகொலையின் போது, ருவாண்டாவின் ஐ.நா அமைதிப் படை நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் ரோமியோ டலாரி - இவ்வாறானதொரு இனப்படு கொலையை உலகம் நினைத்திருந்தால் தடுத்திருக்க முடியும். ஆனால் உலகம் தடுக்கவில்லை ஏனெனில் உலகின் மூலோபாய நலன்களுக்கு இந்தச் சிறிய ஆபிரிக்க நாட்டின் ஏழை மக்களின் உயிர்கள் தேவைப்பட்டிருக்க வில்லையென்று எழுதியிருந்தார்.

முள்ளிவாய்க்காலில் சிக்குண்டிருந்த ஈழத் தமிழ் மக்களின் நிலையும் இதுதான். இறுதி யுத்தத்தின் போது, ஐ.நாவின் பேச்சாளராக இருந்த கோடன் வைஸ், 2011இல், புலிகளின் இரத்தம் என்னும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். புலிகள் இல்லாத உலகம் முன்னரை விடவும் இப்போது சிறப்பாக இருக்கின்றதென்று அதில் குறிப்பிட்டிருந்தார். ஒரு மேற்கு நாட்டவரின் பார்வையின் எல்லை இதுதான். இதனை புரிந்துகொண்டு செயற்பட வேண்டியது நமது பணியாகும்.

இந்த பின்புலத்தில் நோக்கினால் சர்வதேச அழுத்தங்களின் எல்லைகளை கட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு துருப்புச்சீட்டும் எவரிடமுமில்லை. அவர்களுக்கு தேவையென்றால் அதனை குறைக்கவும், கூட்டவும் அவர்களால் முடியும். அவர்களால் மட்டும்தான் அது முடியும். அதற்காக பாதிக்கப்பட்ட தரப்பினர் அமைதியாக இருக்க வேண்டுமென்பதல்ல மாறாக, பாதிக்கப்பட்ட தரப்பினர் என்னதான் நியாயங்களை கூறினாலும் கூட, அந்த நியாயங்கள் மட்டும், உலகின் தீர்மானங்களை மாற்றுவதற்கு போதுமானதல்ல. ஆனால் இவ்வாறான அழுத்தங்களின் எல்லையை புரிந்து கொண்டு, அதற்கேற்ப செயற்பட வேண்டியது நமது கடமையாகும். அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் பேசத்தான் வேண்டும். அதனை கையாளத்தான் வேண்டும். சூழ்சிகளை எதிர்கொள்வதற்கு, சூழ்சியை எதிகொள்ளாமல் தப்பியோடுவது ஒரு உபாயமாகவே இருக்கவே முடியாது.



# அமெரிக்காவினால் இலங்கைக்கு மருத்துவ பொருட்கள் நன்கொடை!

கொழும்பு, டிசெ. 30

அமெரிக்காவினால் இலங்கைக்கு மருத்துவ பொருட்கள் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

7.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மருத்துவப் பொருட்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தை அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மகிந்த சமரசிங்க தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால், நாட்டில் மருந்து பொருட்கள் பற்றாக் குறையாக உள்ள நிலையில், இந்த நன்கொடை அந்த நெருக்கடியை சற்று நிவர்த்தி செய்யும் என நம்பப்படுகின்றது.

(அ)

# கட்சியை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் வருவதில் சிக்கலில்லை

கொழும்பு, டிசெ. 30

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை கைவிட்டு சென்ற அனைவரும் மீண்டும் கட்சியில் இணைய சந்தர்ப்பம் இருப்பதாக அந்த கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சியின் யாப்பை மீறி, கட்சியின் கட்டுப்பாட்டுக்கு எதிராக செயல்பட்டவர்கள், அந்த தவறுகளை திருத்திக் கொண்டு, கோரிக்கை விடுத்தால், கட்சியில் மீண்டும் இணைவதில் எந்த சிக்கலோ, பிரச்னையோ இல்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பல்வேறு காலங்களில் பல சிக்கல்கள், நெருக்கடிகளை எதிர்நோக்கிய கட்சி. எனினும் கட்சி எப்போது மக்களிடம் இருந்து தூர விலகவில்லை.

ஜனநாயகத்தை மீண்டும் ஸ்தாபிக்க தேர்தல் அவசியம் என்றே நாங்கள் கூறுகிறோம். நாட்டு மக்கள் வீதிக்கு வந்து 69 லட்சம் மக்களின் வாக்குகளை பெற்ற ஜனாதிபதி விரட்டிவிட்டு, மாற்றத்தை கோரினர்.

மாற்றங்களை கோரிய மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை மாற்றங்களை கோரிய மக்களுக்கு தற்போது ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கூட தெரிவு செய்ய முடியாத கட்சி ஒன்றின் தலைவருக்கு கீழ் அனுபவித்ததை விட துன்பங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளது.

பல காரணங்களின் அடிப்படையில் எமது கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். தேர்தல் நடத்தப்பட்டால், இவர்களுக்கு ஏற்படும் நிலைமையை காண முடியும்.

தமது அதிகாரம் பறிப் போய்விடும் என்று அஞ்சுவோரே தேர்தல் வேண்டாம் என கூறுகின்றனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பல துண்டுகளாக பிரிந்து தேர்தலை எதிர்கொள்ள முடியாத அச்சத்தில் பல கதைகளை கூறி தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்து வருகிறது - என்றார். (அ)

# சாவகச்சேரி இந்து கல்லூரிக்கு சீன பதில் தூதர் நேற்று விஜயம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

வட பகுதிக்கு வருகை தந்துள்ள சீனப் பதில் தூதுவர் ஹூ வொய், தலைமையிலான குழுவினர் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்து கல்லூரிக்கான உதவித்திட்டங்களை வழங்கினர்.

பாடசாலைக்கு நேற்றுக் காலை சென்ற சீன பதில் தூதுவர் தலைமையிலான குழுவினர் பாண்ட் வாத்திய இசையோடு வரவேற்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

இதன்போது 40 இலட்சம் ரூபா பெறுமதியான மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் சிமாட் வகுப்பறைக்கான உபகரணங்கள் ஆகியவற்றை சீனப் பதில் தூதுவர் பாடசாலைச் சமுகத்திடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சீன தூதர அதிகாரிகள், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருபாகரன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)



கல்வி tv CHANNEL-1

**30.12.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**30.12.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 13ஆம் திருத்தத்தில் வடக்கு-கிழக்கு இணைப்பு உள்ளடக்கப்படவில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் சுட்டிக்காட்டு



நிந்தவூர், டிசெ. 30

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை உள்ளடக்கவில்லை என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும் முன்னாள் வடக்கு- கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ஏ.எல். அப்துல் மஜீட் தெரிவித்துள்ளார்.

ஆட்சி அதிகாரப் பகிர்வில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் உரிமைகளை முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்-

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987.07.29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது, அதற்கமைய 13ஆவது திருத்தச் சட்டம் 1987.11.14ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது. அதன் பிரகாரம் 1988 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு உட்பட மூன்று கட்டங்களாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது.

மாகாண சபைகள் சட்டத்தின் பிரகாரம் வடக்கும் கிழக்கும் ஒரு வருடத்திற்கு மாத்திரமே இணைந்திருக்கும் எனவும் அதன் பின்னர் கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு அதன் மூலமே இணைப்பை நீடிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது மாத்திரமின்றி இரண்டு மாகாண சபைகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்று இரண்டு சபைகளும் தீர்மானிக்கும் பட்சத்தில் இணைந்து செயற்பட முடியும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2006ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் படி வடக்கும் கிழக்கும் வெவ்வேறாக பிரிக்கப்பட்டு, 2008ஆம் ஆண்டும் 2012ஆம் ஆண்டும் மாகான சபை தேர்தல் நடாத்தப்பட்டது என்பது நாடறிந்த வரலாறாகும்.

13ஆவது அரசியல் திருத்த சட்டத்தில் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்ற சரத்து உள்ளடக்கப்பட்டிருப்பின் அதை மீட்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு கிடையாது என்பது அரசியல் மாணவர்களுக்கு புரியும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றுவாய் என்பது அதிகாரப் பகிர்வுடன் பின்னிப்பிணைந்து நிற்கின்றது. கட்சியின் ஸ்தாபகர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் காலத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட அரசியல் அபிலாசைகளும் கோட்பாடுகளையும் இன்றைய எமது தலைவர் ரவூப் ஹக்கீம் முன்னெடுத்துச் செல்வதில் எந்தக் கட்டத்திலும் பின்வாங்கவில்லை.

ஆட்சி அதிகாரப்பகிர்வில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் மறுதலிக்கப்படாத உரிமைகளை நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை- என்றார்.

(அ-06)

# நீதிமன்ற கட்டட தொகுதிக்கு தீ; மூன்று சந்தேக நபர்கள் கைது!

அம்பாறை, டிசெ. 30

அக்கரைப்பற்று நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்ட விசாரணையை தொடர்ந்து இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கோளாவில் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்கள் மூவரையும் அக்கரைப்பபற்று நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இம்மாதம் 21ஆம் திகதி அக்கரைப்பற்று நீதிமன்ற கட்டடத் தொகுதி தீயில் எரிந்தது. இதன்போது நீதிமன்ற ஆவணப்பகுதி முற்றாக நாசமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாவிதன்வெளி, திருக்கோவில் பிரதேச செயலகங்கள் சாதனை

அம்பாறை, டிசெ. 30

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி மற்றும் திருக்கோவில் பிரதேச செயலகங்கள் தேசிய ரீதியில் விருதுகள் பெற்று சாதனை படைத்துள்ளன.

தேசிய ரீதியில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையில் நடாத்தப்படும் உற்பத்தித்திறன் போட்டியின் 2020 ஆம் ஆண்டுக்கான போட்டியில் நாவிதன்வெளி, திருக்கோவில் ஆகிய பிரதேச செயலகங்கள் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றன.

இவ் விருதுக்கான பிரதான மதிப்பீடாக அவ் அவ் பிரதேச செயலகத்தில் பொது மக்களுக்காக வழங்கப்படும் சேவைகளை மதிப்பிடுவதுடன் இலத்திரனியல் நுட்பங்களை உட்புகுத்தி விரைவான சேவையை வழங்குகின்ற ஆற்றல் என்பவையும் இந் மதிப்பீட்டில் பிரதானமாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு இந் விருதுக்காக அரச நிறுவனங்களை தெரிவு செய்கின்றனர்.

மேலும் ,அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் இது வரையில் பெறப்பட்ட அதிகூடிய அடைவுமட்டம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இடமாற்றம் பெற்றுச் செல்லும் அலுவலர்களுக்கு பிரியாவிடை

அம்பாறை, டிசெ. 30

கிழக்கு மாகாண சபையின் வருடாந்த இடமாற்றத் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபையில் இருந்து இமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. எம்.றகீப் பிரியாவிடை அளித்தார்.



மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.எச்.ஹலீம் ஜௌஸி, நிர்வாக உத்தியோகத்தர் எம்.அப்துர் றஹீம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது குறித்த உத்தியோகத்தர்களின் கடந்த கால அர்ப்பணிப்பு மிக்க சேவைகளைப் பாராட்டிய மாநகர முதல்வர், அவ்வுத்தியோகத்தர்களுக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவித்துக் கொண்டார். அத்துடன் சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களை விடுவிக்கும் பத்திரங்களும் அவர்களிடம் கையளிக்கப்பட்டன. (அ)

# வண்ணாத்தி ஆற்றில் முதலையினால் இழுத்து செல்லப்பட்டவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, டிசெ. 30

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிஓடை வண்ணாத்தி ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற விவசாயி, முதலையினால் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில், இரண்டு நாட்களுக்கு பின்னர் அவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

தம்பாலம்வெளி கொடுவாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய சடாசிவம் சிவபாபு என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

மாவடி ஓடைப் பகுதியில் வேளாண்மைக்கு காவல் காக்க அமைக்கப்பட்ட குடிசையில் இருந்து வேளாண்மை காவல் காத்துவந்து சடாசிவம் சிவபாபு, அருகிலுள்ள வண்ணாத்திவில் ஆற்றில் மீன்பிடிப்பதற்காக கடந்த 26ஆம் திகதி பகல் இறங்கியபோது அவரை முதலை இழுத்துச் சென்றதாக கூறப்படுகின்றது.

இதனையடுத்து அம்பாறை ஓலுவில் கடற்படையினரின் உதவியுடன் பொலிஸார் ஆற்றில் காணாமற்போனவரை தேடி வந்த நிலையில் முதலையால் கை, கால்கள் கடிக்கப்பட்ட நிலையில் சடலத்தை மீட்புக் குழுவினர் கண்டெடுத்தனர். (அ)

# அம்பாறை விவசாயிகளுக்கும் அரசு உதவி வழங்கவேண்டும்

## ஐக்கிய காங்கிரஸ் கோரிக்கை

நிந்தவூர், டிசெ. 30

"அரசாங்கம் வழங்கவிருக்கும் விவசாயிகளுக்கான உதவுத்தொகைகள், இலங்கையின் முக்கிய விவசாய மாவட்டமானதும், மிக அதிக விவசாய காணிகளைக் கொண்டதுமான அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கும் கிடைக்க ஆவன செய்யப்படவேண்டும்."

-இவ்வாறு, ஐக்கிய காங்கிரஸ் கட்சி அரசாங் கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய காங்கிரஸ் கட்சி சார்பில் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இத்தகைய விவசாயிகளுக்கான உதவிகள் அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு இது வரையும் கிடைக்காமை இந்த மாவட்ட முஸ்லிம் சோம்பேறி பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதாகவுள்ளமைதான் காரணமாக இருக்கலாமெனவும் அவர் விசனம் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதுவரை இல்லாத அளவு அரசாங்கம் விவசாயிகளுக்கு உதவித் தொகை வழங்கி வருகிறது.

இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மற்றுமொரு வெற்றியாகும்.

விவசாயிகளுக்கான உர விநியோகத்தை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தடை செய்ததன் மூலம் பாரிய தவறை செய்திருந்தார். இது பிழையான முடிவு என்று அப்போதே நாம் பகிரங்கமாக சுட்டிக்காட்டினோம்.

இப்போது நாடு முழுவதும் யூரியா உரம் தாராளமாக கிடைக்கிறது. அத்துடன் நாட்டின் 7 மாவட்டங்களில் உள்ள குறைந்த வருமானம் கொண்ட நெல் விவசாயக் குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஒரு குடும்பத்திற்கு 15,000 ரூபாய் உதவித்தொகையாக வழங்கவுள்ளது.

சர்வதேச அபிவி ருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவ னம் வழங்கவுள்ள இந்த உதவித்தொகை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, வவுனியா, மொனரா கலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் மாதாந்த வருமானம் 41,500 ரூபாவுக்கும் குறைவான விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப் படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்தத் தொகை ஜனவரி மாதம் இரண்டு தவணைகளாக வழங்கப்படும் என விவ சாய அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எச். எல். அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஆசிய அபிவிருத்தி வங்கியானது, நாட்டிலுள்ள 12 இலட்சம் விவசாயக் குடும்பங் களுக்கு 08 பில்லியன் ரூபாவை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்துள்ளது.

நாட்டின் விவசாயிகளுக்கு வேறு எந்த பயிர்ச் செய்கை காலத்திலும் இவ்வளவு நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும் தெரிய வருகிறது.

ஆனாலும் இந்த உதவிகள் அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு இன்னமும் கிடைக்க வில்லை. காரணம் அம்பாறை மாவட்டத்தில்தான் முஸ்லிம் சோம்பேறி எம்.பிமார் பலர் உள்ளதாக இருக்கலாம் என்பதாலோ தெரியவில்லை.

மிக அதிக விவசாய பூமியை கொண்ட அம்பாரை மாவட்ட விவசாயிகளுக்கும் மேற்படி உதவிகள் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி கேட்டுக் கொள்கிறது-என்றார்.

(அ-06)



# உறைந்தது நயகரா!

நியூயோர்க், டிசெ. 30
அமெரிக்காவில் வீசிய கடும் பனிபுயலால், உலகப் புகழ் பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சி பனிப்பாறையாக உறைந்துள்ளது.
வரலாறு காணாத அளவிற்கு வீசிய பனிப்புயல் காரணமாக அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்கள் ஸ்தம்பித்தன.
குளிர்கால பனிப்புயலால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் முடங்கிய நிலையில், ஏரிகள், ஆறுகள் உறைந்துள் ளன.
அமெரிக்கா-கனடாவின் எல்லையில் உள்ள நயாகரா நீர் வீழ்ச்சியின் ஒரு பகுதி முற்றிலும் பனிப் பாறையாக உறைந் துள்ளது.
சில இடங்களில் மட்டும் பனிப்பாறைக்கு கீழ்ப்பகுதியில் இருந்து தண்ணீர் கொட்டுகிறது. (அ)

# கசினோ விடுதியில் தீ; 10 பேர் உடல் கருகி பலி!



நாம்பென், டிசெ. 30
கம்போடியா - தாய்லாந்து எல்லைக்கு அருகே உள்ள ஹோட்டலின் கெசினோ விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்ததோடு, 40 பேர் வரையில் காயமடைந் துள்ளனர்.
நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ஏற்பட்ட தீயினால் சூதாட்ட விடுதிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.
தீ விபத்து ஏற்பட்ட போது கட்டிடத்தில் சுமார் 40 பேர் இருந்ததாக கூறப்படுகிறது.
தீ விபத்து ஏற்பட்டதைய டுத்து, கட்டிடத்தில் இருந்து சிலர் குதிக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. (அ)

# இந்திய இருமல் மருந்தை உட்கொண்ட 18 குழந்தைகள் பலி!

## உஸ்பெகிஸ்தானில் அதிர்ச்சி சம்பவம்!!

ராஸ்கென்ற், டிசெ. 30
இந்தியாவில் தயாரிக்கப் பட்ட இருமல் மருந்தை அருந் தியதில் தங்கள் நாட்டைச் சேர்ந்த 18 குழந்தைகள் பலியா னதாக உஸ்பெகிஸ்தான் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.
இது தொடர்பாக அந் நாட்டு சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இந்தியாவில் தயாரிக்கப்பட்ட டொக்-1 மக்ஸ் என்ற இருமல் மருந்த உட்கொண்ட குழந் தைகள் உயிரிழந்துள்ளனர். இந்த மருந்து இந்தியாவின் நொய்டா நகரில் உள்ள மேரி யான் பயோரெக் நிறுவனத் தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தை நாங்கள் ஆய் வுக்கூட பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அதில் எத்திலின் க்ளைக்கால் என்ற நச்சுப் பொருள் பயன்படுத்தப் பட்டிருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது.
உயிரிழந்த குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக் கப்படுவதற்கு முன்னதாக 2 முதல் 7 நாட்கள் வரை அன்றா டம் 2.5 மி.லீ முதல் 5 மி.லீ அருந்தியுள்ளனர். அன்றாடம் மூன்று முதல் 4 முறை இந்த மருந்து அவர்களுக்குக் கொடுக் கப்பட்டுள்ளது. உள்ளூர் மருந் துக்கடைக்காரர்கள் பரிந்துரை யின்படி பெற்றோர் இந்த மருந்தினை குழந்தைகளுக்குக் கொடுத்துள்ளனர். இதனைய டுத்து நாட்டில் உள்ள அனைத்து மருந்துக் கடைகளிலும் இருந்து டொக்-1 மக்ஸ் மருந்தை அரசு



திரும்பப்பெற்றுள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடுமையான சுவாச நோயால் பாதிக்கப்பட்டு டொக்-1 மக்ஸ் சிரப்பை எடுத்துக் கொண்ட 21 குழந்தைகளில் 18 பேர் உயிரி ழந்துள்ளனர்.
இறப்புகளை சரியான நேரத் தில் பகுப்பாய்வு செய்யாததற் காகவும், தேவையான நடவடிக் கைகளை எடுக்காததற்காகவும் அலட்சியமாக இருந்ததாக குறிப்பிட்டு ஏழு ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளதாக உஸ்பெக் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.
சில நிபுணர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்ததாக அது கூறியது, நிபுணர்களின் பங்கு என்ன என்பதைக் குறிப்பிடவில்லை.
இந்நிலையில் உஸ்பெகிஸ் தான் அரசின் இந்த குற்றச் சாட்டு தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்று இந்திய மத்திய மருந்துகள் தரக் கட்டுப் பாட்டு கூட்டமைப்பின் வடக்கு மண்டலம் தெரிவித்துள்ளது.

**காம்பியாவில் நடந்த துயரம்**

கடந்த ஒக்ரோபர் மாதம் ஆபிரிக்க நாடான காம்பியா வில் இருமல் மருந்து குடித்து 70 குழந்தைகள் பலியான நிலையில் இந்திய மருந்து நிறுவனத் தயாரிப்புகள் குறித்து உலக சுகாதார நிறு வனம் எச்சரிக்கை விடுத்தது.
மெய்டன் பார்மாசூட்டி கல்ஸ் என்ற இந்திய நிறுவ னத்தின் தயாரிப்புகள் இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. கெட்டுபோன மருந்துகள் மேற்கு ஆபிரிக்க நாடான காம்பியாவைத் தவிர வேறு சில நாடுகளுக்கும் ஏற்றுமதி ஆகியிருக்கலாம் என்பதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
இந்தியாவின் மத்திய மருந் துகள் தரம் கட்டுப்பாட்டு அமைப்பு அனுப்பிய தகவலின் படி சம்பந்தப்பட்ட நிறுவனம் மாசுபட்ட மருந்துகளையே காம்பியாவுக்கு ஏற்றுமதி செய்திருப்பது உறுதியானது.
இந்நிலையில் இப்போது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இருமல் மருந்தை அருந்தியதில் தங்கள் நாட்டைச் சேர்ந்த 18 குழந்தைகள் பலியானதாக உஸ்பெகிஸ்தான் அரசு குற்றஞ் சாட்டியுள்ளது.
இந்தியா “உலகின் மருந்த கம்” என்று அழைக்கப்படுகி றது. அதன் மருந்து ஏற்றுமதி கடந்த பத்தாண்டுகளில் இரு மடங்கு அதிகரித்து கடந்த நிதியாண்டில் 24.5 பில்லியன் டொலராக அதிகரித்துள் ளது. (அ)

# உக்ரைனில் போரால் 7 ஆயிரம் மக்கள் பலி!

## ஐ.நா. மனித உரிமைகள் சபை தகவல்

ஜெனிவா, டிசெ. 30
உக்ரைன் போரில் தற்போது வரை அப்பாவி மக்கள் சுமார் 7 ஆயிரம் பேர் பலியானதாக ஐ.நா. மனித உரிமைகள் சபை தெரிவித்துள்ளது.
இது குறித்து அந்த சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-
போர் தொடங்கிய பெப்ர வரி 24 ஆம் திகதியிலிருந்து கடந்த 26 ஆம் திகதி வரையில் போரில் பெண்கள், சிறுவர்கள் உள்பட 6,884 பேர் கொல்லப் பட்டனர். 10,947 பேர் காயம டைந்தனர்,
இது தவிர ரஷ்ய படைக ளால் கைப்பற்றப்பட்ட உக் ரைன் நகரங்களில் நடத்தப் பட்ட தாக்குதல்களில் 483 பேர் கொல்லப்பட்டனர். 1,633 பேர் காயமடைந்துள்ளனர் என கூறப்பட்டுள்ளது. (அ)

# சீனாவில் இருந்து வருபவர்களுக்கு கோவிட் பரிசோதனை கட்டாயம்!

## அமெரிக்கா அறிவிப்பு

நியூயோர்க், டிசெ. 30
அடுத்த வாரம் எல்லை களை மீண்டும் திறக்கப் போவதாக சீனா அறிவித் ததை அடுத்து, சீனாவில் இருந்து வருபவர்களுக்கு கொவிட் பரிசோத னையை விதிக்கும் சமீபத்திய நாடாக அமெரிக்கா மாறியுள்ளது.
இத்தாலி, ஜப்பான், தாய்வான் மற்றும் இந்தி யாவும் கட்டாய சோத னைகளை அறிவித்தன. ஆனால் அவுஸ்ரேலியா மற் றும் பிரித்தானியா, சீனாவிலி ருந்து வரும் பயணிகளுக்கு புதிய விதிகள் எதுவும் இல்லை என்று தெரிவித்தன.
மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு உலக நாடுகளுக்கு மூடப் பட்ட கதவுகளை ஜனவரி 8 முதல் திறப்பதாக சீனா அறி




வித்தது.
சீனா இந்த வாரம் ஒரு நாளைக்கு சுமார் 5,000 தொற் றுகளை அதிகாரப்பூர்வமாகப் புகாரளித்துள்ளது, ஆனால், ஆய்வாளர்கள் எண்கள் மிக வும் குறைத்து மதிப்பிடப்பட் டதாகக் கூறுகின்றனர்.
சீனாவின் முக்கிய நகரங்க ளில் உள்ள மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன மற்றும் அடிப்படை மருந்துகளைக் கண்டுபிடிக்க முடியாமல் மக்கள் சிரமப்படுகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
சீனாவின் வெளி யுறவு அமைச்சக செய்தித் தொடர்பா ளர் வாங் வென்பின், தற்போது சீனாவின் தொற்றுநோய் நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது என்று கூறினார்.
சில நாடுகளும் ஊடகங்க ளும் நிலைமையை பெரிதாக்கி காட்டுவதாகவும் சீனாவின் கொவிட் கொள்கை மாற்றங் களை சிதைப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (அ)

# சூடானில் கொடூர விபத்து; 16 பேர் பலி! 19 பேர் காயம்!



கார்ட்டூம், டிசெ. 30
சூடானின் தலைநகர் கர்டூ மில் இருந்து டொர்பர் மாகா ணத்தின் பேஷர் நகருக்கு 30 இற்கும் மேற்பட்ட பய ணிகளுடன் சென்றுகொண்டி ருந்த பஸ் கார்ட்டூமை அடுத்த ஓம்துர்மன் நகருக்கு அருகே சென்றபோது திடீரெனச் சார தியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நிறுத்தப்பட் டிருந்த லொறி மீது மோதி விபத்துக்குள்ளானது.
இந்த கோர விபத்தில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 16 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும் 19 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் உடன டியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர். (அ)



# இந்தியாவுடனான தொடர் இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

இந்தியாவுக்கு எதிராக விளையாடவுள்ள 20 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒருநாள், இருபது - 20 அணிகளே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த இரு அணிகளுக்கும் தசூன் சானக தலைமை தாங்குகிறார்.

இதேவேளை, ஒருநாள் அணிக்கு குசல் மெண்டிஸ் உப தலைவராக செயல்படவுள்ளார். இருபது - 20 அணிக்கு வனிந்து ஹசரங்க உபதலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்தியா செல்லும் இலங்கை அணி 3 இருபது - 20 போட்டி தொடரிலும், 3 ஒருநாள் போட்டி தொடரி லும் விளையாடவுள்ளது.

அணி விவரம் - தசூன் சானக (தலைவர்), பதும் நிசங்க, அவிஸ்க பெர்னாண்டோ, சதீர சமரவிக்கிரம, குஷல் மெண்டிஸ், பானுக ராஜபக்ஷ, சரித் அசலங்க, தனஞ்சய டி சில்வா, வனிந்து ஹசரங்க, அசன் பண்டார, மகீஷ் தீக்ஷன, ஜெப்றி வன்டர்ஷே, சாமீக கருணாரத்ன, டில்ஷான் மதுஷங்க, கசூன் ராஜித, நுவனிந்து பெர்னாண்டோ, டுனித் வெல்லாலகே, பிரமோத் மதுசன், லஹிரு குமார, நுவான் துஷார

# நோவக் ஜொகோவிச் மீண்டும் அவுஸ்திரேலியா சென்றார்!




சிட்னி, டிசெ. 30

முதல்நிலை ரென்னிஸ் வீரர் ஜொகோவிச் மீண்டும் அவுஸ்திரேலியா சென்றார்.

முன்னாள் முதல்நிலை ரென்னிஸ் வீரரும், 21 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற சாதனையாளருமான நோவக் ஜொகோவிச் (சேர்பியா) கடந்த ஆண்டு அவுஸ் திரேலிய ஓப்பன் ரென்னிஸில் பங்கேற்க மெல்பர்ன் சென்ற போது கொரோனா தடுப்பூசி போடாததால் விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்டார்.

ஹோட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்ட அவருக்கு அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார். ஆனால், எதிரான தீர்ப்பு வந்ததால் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படாமல் சேர்பியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்த விவகாரம் விளையாட்டு அரங்கில் பெரும் சர்ச்சையை கிளப்பியது. இந்த நிலையில் கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் ஜொகோவிச் ஓராண்டுக்கு பிறகு செவ்வாய் இரவு அவுஸ்திரேலியாவுக்கு சென்றார். அங்கு அடிலெய்ட் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் பங்கேற்கும் ஜொகோவிச் அதைத் தொடர்ந்து ஜன.16ஆம் திததி மெல்பர்னில் தொடங்கும் அவுஸ்திரேலிய ஓப்பனிலும் களமிறங்கவுள்ளார்.

ஆனால் போட்டியின் போது, முன்புபோல் அவுஸ்திரேலிய ரசிகர்களிடம் அவருக்கு வரவேற்பு கிடைக்குமா? என்பதே மிகப்பெரிய கேள்வியாகும்.

# 17 ஆண்டுகளின் பின்னர் தாயகத்தில் தெ.ஆபிரிக்காவை வீழ்த்தியது ஆஸி.!




மெல்பர்ன், டிசெ. 30

17 ஆண்டுகளுக்கு பிறகு தங்கள் சொந்த மண்ணில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி.

மெல்பர்ன் டெஸ்ட்டில் தென்னாபிரிக்கா அணியை இரண்டாவது இனிங்ஸிலும் 204 ஓட்டங்களில் சுருட்டி அவுஸ்திரேலியா 182 ஓட்டங் கள் வித்தியாசத்தில் மிகப் பெரிய இனிங்ஸ் வெற்றியைப் பெற்று 3 டெஸ்ட்கள் கொண்ட தொடரை 2-0 என்று கைப்பற்றியுள்ளது. இந்தத் தொடரில் இன்னும் ஒரு டெஸ்ட் மீதமுள்ளது. அவுஸ்திரேலிய மண்ணில் 2005-06இல் நடந்த டெஸ்ட் தொடரில் பெற்ற வெற்றிக்குப் பிறகு 17 ஆண்டுகள் கழித்து அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்காவை தங்கள் சொந்த மண்ணில் வீழ்த்தி டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய வரலாற்றுத் தருணமாகும்.

தொடர்ச்சியாக 3 டெஸ்ட் தொடர்களை அவுஸ்திரேலிய மண்ணில் தென்னாபிரிக்கா வென்றிருந்தது.

சிட்னியில் அடுத்த டெஸ்ட் நடைபெறுகிறது. இதில் வென்றால் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டி வாய்ப்பில் தென்னாபிரிக்கா இருக்கும். தோற்றால் வெளியேறி விடும். தென்னாபிரிக்காவுக்கு ஒரே ஆறுதல் 8 டெஸ்ட் இனிங்ஸ்களாக 200 ஓட்டங்களுக்கும் கீழ் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த ஒரு தரக்குறைவான சாதனைக்கு இந்த இனிங்ஸில் 204 ஓட்டங்கள் எடுத்து முற்றுப்புள்ளி வைத்தது.

தெம்பா பவுமா (65 ஓட்டங்கள்) மட்டுமே அரைச்சதம் கடந்தார். இந்தத் தொடரில் ஓரளவுக்கு சீரான முறையில் ஆடும் தென்னாபிரிக்க விக்கெட் காப்பாளர் கைல் வெரைனா 40 பந்துகளில் 33 ஓட்டங்கள் எடுத்தார். இருவரும் சேர்ந்து 63 ஓட்டங்களைச் சேர்த்ததுதான் ஒரே அரைச்சதக் கூட்டணியாகும்.

நதன் லயன், 58 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்ற, ஸ்காட் போலண்ட் 2 விக்கெட் கைப்பற்றினார்.

ஒரு விக்கெட்டையை கைப்பற்றிய போதும் பட் கம்மின்ஸ் சிறப்பாக பந்து வீசினார். 16 ஓவர்களை வீசிய அவர் 8 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களையே கொடுத்திருந்தார்.

தென்னாபிரிக்க வீரர்கள் சாதாரண பந்துவீச்சுக்கே ஆட்டமிழந்தனர், 2 ரன் அவுட்கள் அவர்களின் ஓட்டங்கள் எடுக்கும் எடுக்கும் முடிவை கேள்விக்கு உட்படுத்துகிறது. மேலும், பந்துகளை அடிக்கத் தெரிவதில் தென்னாபிரிக்கா வீரர்கள் சோடைபோயினர். உதாரணமாக அலட்சியமாக ஆடி ஆட்டமிழந்தனர். இதற்கு உதாரணமாக எல்கரின் அவுட்டை குறிப்பிடலாம் இந்த தொடரில் 2ஆவது முறையாக அவர் நேற்றுமுன்தினம் லெக் திசையில் செல்லும் பந்தை தொட்டு ஆட்டமிழந்தார். இப்படித்தான் மற்றவர்களும் சுலபமாக அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சாளர்களால் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டனர்.

உத்தி, மனநிலை என்று தென்னாபிரிக்கா அணிக்கு அணியை மறுகட்டுமானம் செய்வதில் ஏகப்பட்ட சிக்கல்கள் உள்ளன. 3ஆம் நிலையில் இறங்கும் வீரர் எப்போதும் வலுவான வீரராக இருக்க வேண்டும் எந்த அணியிலுமே 3ஆம் நிலை வீரர் வலுவாக இருப்பது அவசியம். ஆனால், தென்னாபிரிக்காவில் வான் டெர் டுசன் மற்றும் இந்த டெஸ்டில் ஆடிய டி ப்ருய்ன் ஆகியோருக்கு உத்தியே இல்லை. வெறுமனே எந்தத் திட்டமும் இன்றி பந்துகளை அடித்தாட முனைந்தனர்.

யான்சென் முதல் இனிங்ஸில் அரைச்சதம் எடுத்தார். ஆனால், 2ஆவது இனிங்ஸில் எல். பி. டபிள்யூவாகி வெளியேறினார்.

69வது ஓவரில் தென்னாபிரிக்கா 204 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

டேவிட் வோர்ணர் ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப் பட்டார்.

(ஐ)

# இந்தியா - பாகிஸ்தான் டெஸ்டை நடத்துவதற்கு எம். சி. சி. பரிசீலனை!




மெல்பர்ன், டிசெ. 30

மெல்பர்ன் கிரிக்கெட் கழகம் (எம். சி. சி) இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே டெஸ்ட் போட்டியை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலித்து வருகிறது.

மெல்பர்ன், இந்தியா பாகிஸ் தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே கடந்த 2007ஆம் ஆண்டு இரு தரப்பு டெஸ்ட் தொடர் நடைபெற்றது. இதற்கு பிறகு இரண்டு அணிகளும் தங்களுக்குள் இரு தரப்பு டெஸ்ட் தொடர்களில் விளையாடவில்லை. பல ஆண்டு களாக நீடித்து வரும் அரசியல் சார்ந்த பிரச்னைகளால் இரு நாடுகளும் தங்களுக்குள் சுற்றுப் பயணம் செய்து விளையாட வில்லை.

இந்த இரு அணிகள் இரு தரப்பு போட்டிகளைத் தவிர, ஆசிய கிண்ணம் மற்றும் உலகக் கிண்ணத் தொடர்களில் பங்கேற்று வருகின் றன. கடைசியாக இந்த இரு அணிக ளும் சமீபத்தில் இந்தியா, பாகிஸ்தான் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் மோதின. மெல்பர்ன் மைதானத்தில் நடை பெற்ற இந்த போட்டியை சுமார் 90 ஆயிரம் ரசிகர்கள் கண்டு களித்தனர்.

இது அந்த மைதானத்தில் அதிக அளவு ரசிகர்களால் பார்க்கப்பட்ட போட்டிகளில் ஒன்றாக அமைந் தது. இந்த நிலையில் இந்த நிலை யில் மெல்பர்ன் கிரிக்கெட் கழகம் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே டெஸ்ட் போட்டியை நடத்துவதற்காக ஆர்வம் காட்டி சாத்தியக்கூறுகளை பரிசீலித்து வருகிறது.

(ஐ)

# ரணிலுக்கும் எனக்கும் முரண்பாடு ஏதுமில்லை!

## கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, டிசெ. 30

"ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க தலைமையிலான இந்த அரசில் எந்த அமைச்சுப் பதவி யையும் நான் பொறுப்பேற்க மாட்டேன்."

-இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் அம்பாந் தோட்டை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்க ளிடம் அவர் மேலும் கூறுகை யில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும் எனக்கும் எந்தவித முரண்பாடும் இல்லை. ரணில் பழுத்த அரசியல்வாதி. சிறந்த தலைவர். எனினும், அவர் தலைமையிலான தற்போதைய அரசில் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்க நான் தயார் இல்லை. எனக்கு அமைச்சுப் பதவி கிடைக்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் எவரும் முரண்படவும் தேவையில்லை- என்றார். (அ)

# நாட்டை எம்மிடம் ஒப்படையுங்கள்!

## அரசிடம் கோருகிறார் சஜித்

கொழும்பு, டிசெ. 30

"நாட்டை எங்களிடம் ஒப்ப டையுங்கள். கட்டியெழுப்பித் தருகின்றோம்."

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'பிரபஞ்சம்' வேலைத்திட் டத்தின் கீழ் 52 ஆவது கட்ட மாக 50 இலட்சம் ரூபா பெறு மதியான பாடசாலை பஸ் ஒன்று பிலியந்தல தர்மராஜ மகா வித்தி யாலயத்துக்கு நேற்று முன் தினம் எதிர்க்கட்சித் தலைவரால் அன்பளிப்புச் செய்யப் பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது:-

பிரபஞ்சம் வேலைத்திட்டம் என்பது நம் நாட்டுக்குப் பழக் கப்பட்ட ஒரு திட்டமல்ல. மக்க ளின் வரிப்பணத்தைப் பயன் படுத்தி ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகு பல்வேறு விடயங்க ளைச் செய்யப் பழகியதே தவிர, அதிகாரம் இல்லாத போது மக்க ளுக்காக சேவை செய்ய நம் நாடு பழக்கப்படவில்லை. இது சம்பி ரதாயக் கட்டமைப்புக்கு அப் பாற்பட்ட வேலைத்திட்டம். முறைமை மாற்றத்தை கோருப வர்களுக்கு இது மிகவும் வெற்றி கரமான முறைமை மாற்றமாகும்.

இந்நாட்டில் சுகாதாரத் துறைக்கு, கல்வித் துறைக்கு இது போன்ற பணியை வேறு



எந்த எதிர்க்கட்சியும் செய்ய வில்லை. நாட்டை வங்கு ரோத்தாக்கி நாட்டுக்கு எந்த வொரு பணியையும் ஆளும் கட்சி செய்வதாக இல்லை.

ஏதேனும் ஒரு தருவாயில், தற்போதைய எதிர்க்கட்சியிடம் மக்கள் நாட்டின் பொறுப்பை ஒப்படைத்தால், மூச்சு, பிரபஞ் சம் வேலைத்திட்டங்கள் போன்று எமது நாட்டின் நிதிப் பிரச்னையை வெற்றிகரமாகத் தீர்த்து வைப்போம்.

"இல்லை" "முடியாது" "பார்ப்போம்" போன்ற வார்த் தைகள் என்னிடம் இல்லை. எந்தவொரு சவால் விடுக்கப் பட்டாலும் உலகில் அபிவிருத் தியடைந்த நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தி மீண்டும் வலுவான, வளமான நாட்டை உருவாக்குவோம்.

அரசியல் மேடைகளில் தம்பட்டம் அடிக்கும், மக்கள் பணத்தை கொள்ளையடிக்கும் அரசியல்வாதிகளுக்கு இந்த பஸ்களை வழங்கும் திட்டம் நகைச்சுவையாக இருக்கும். 2022 ஆம் ஆண்டில், சில பாட சாலைகளில் பல்வேறு பய ணங்களுக்கான போக்குவரத் துக் கட்டண மாக கிட்டத்தட்ட 20 இலட் சம் ரூபா வசூலிக்கப்பட் டுள்ளது. இவ்வாறு இலவச மாக பஸ் கொடுப்பதன் மூலம் இவ்வளவு பெரிய தொகை வசூலிப்பது குறையும்.

இளைஞர்களைப் பகடைக் காயைப் போல் பயன்படுத்தும் தரப்பால் இன்னும் நாட்டுக்குச் சேவை ஆற்றப்படவில்லை. அத்தரப்பினர் தங்கள் கட்சி அலுவலகங்களை மிகவும் ஆடம்பரமாக நிர்மாணித்துள் ளனர்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி இன்னும் வாடகை வீட் டில்தான் இயங்கி வருகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி ஒரு போதும் கட்சி நிதியை தன் விருப்பப்படி செலவிடுவ தில்லை. அத்தகைய நிதி பிர பஞ்சம், மூச்சு போன்ற மக்க ளுக்குப் பயனுள்ள திட்டங்க ளுக்கு மட்டுமே செலவிடப் படும். நாம் எவ்வளவு பணத் தைக் கொண்டிருந்தாலும் சரி, படித்தவர்களாக இருந்தாலும் சரி, ஒழுக்கம் மிக்க சமுதா யத்தை உருவாக்குவது நமது கடமையாகும்-என்றார். (அ)

# நட்பு ரீதியான உதவிகளை இலங்கைக்கு சீனா செய்யும்

## யாழ்ப்பாணத்தில் கூறினார் பிரதித் தூதுவர்



யாழ்ப்பாணம், டிசெ. 30

இலங்கைக்கு கலாசாரம், மதம் தாண்டி நட்பு ரீதியான உதவிகளை எதிர்வரும் காலங் களில் செய்வோம் என இலங் கைக்கான சீனத் தூதுவர் ஹூ வெய் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக் கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இலங்கை, சீனா ஆகிய இரு நாடுகளின் நட்பு என்பது நட் பின் நண்பன். அந்த வகையில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

பாடசாலை மாணவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பு செய்வதற்கான உணவுப்பொதி களும் வழங்கப் பட்டு வருகின்றன. இது சீனத் தூதர கத்தின் நிகழ்ச்சித் திட்டமாக காணப்படுகின்றது.

மேலும் 9 ஆயிரம் மெற் றிக்தொன் டீசல் எரிபொருள் கள் கிடைக்கப் பெறவுள்ளன. அவை யாழ்ப்பாண விவசாயி கள், மீனவர்களுக்கு பகிர்ந்த ளிக்கப்படவுள்ளன.

மேலும் 10ஆயிரம் மெற் றிக்தொன் அரிசியை இலங் கைக்கு சீனா வழங்கவுள்ளது. இந்த அரிசி வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட விருக்கின் றது-என்றார். (அ)

# புதையல் தோண்டும் ஸ்கானருடன் செட்டிகுளத்தில் இளைஞன் கைது!

வவுனியா, டிசெ. 30

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் புதை யில் தோண்ட பயன்படும் ஸ்கனார் இயந்திரத் துடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட் டார் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்த னர்.

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் விசேட சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையி னர் சந்தேகத்திற்கிடமான இளைஞர் ஒருவரை சோதனை செய்தபோது அவரிடம் இருந்து புதையல் தோண்ட பயன்படும் ஸ்கானர் இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, குறித்த இயந்திரம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டது டன், அதனை எடுத்துச் சென்ற 35 வயதுடைய இளைஞரும் கைது செய்யப்பட்டு செட்டி குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இது குறித்த மேலதிக விசாரணைகளை செட்டி குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# பிரதான போதை வியாபாரிகளுக்கு மரண தண்டனை வழங்கவேண்டும்

## கீதா குமாரசிங்க கோரிக்கை

கொழும்பு, டிசெ. 30

பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் ஆபத்தில் இருந்து காப்பாற்ற பிரதான போதைப் பொருள் வியாபாரிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என சிறுவர் மற்றும் பெண் கள் விவகார ராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாடசாலை மாணவர்கள் மத்தி யில் போதைப் பொருள் பரவல் அதி கரித்துள்ளது என்பதை விஞ்ஞான ரீதியாக சுட்டிக் காட்டவேண்டும்.

போதைப் பொருள் பாவனையில் இருந்து பிள்ளைகளை பாதுகாக்க பாடசாலைகளின் சோதனை நடத்தப்பட்டாலும் பாடசாலைக்குள் போதைப் பொருள் செல்லும் வழியை தடுக்க வேண்டும்.

மிகப் பெரிய அளவில் போதைப் பொருள் சுற்றுவளைப்பு தேடுதல்களை உடனடியாக



ஆரம்பிக்கவேண்டும். கைப்பற் றிய போதைப் பொருளுக்கு என்ன நடந்தது என்பதை வெளியிடும் பொறுப்பு பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணி யகத்திற்குரியது.

பாடசாலை மாணவர்கள் தற்போது ஆபத்தான நிலை மைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நாட்டுக்குள் போதைப் பொருள் வருவதை தடுக்க வேண்டுமாயின் வான் மற்றும் கடல் வழியாக வருவதை தடுக்க வேண்டும்.

கைப்பற்றப்படும் போதைப் பொருள் மீண் டும் வெளியில் செல்கிறது.

கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள் பல வழிகளில் மீண்டும் வெளியில் செல்கிறது. அவை மீண்டும் நாடு முழுவதும் பரவி பிள்ளைகளின் கைகளுக்கு செல்கிறது-என்றார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார் சஜித்

## கூறுகின்றது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, டிசெ. 30

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எப்போதும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடமாட்டார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்த வில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பேருந்து ஓட்டுவதில்லை என்ப தால், சஜித் பிரேமதாச அவ ருக்கு பெரிய சவால் இல்லை.

அத்துடன் சஜித் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து ஐக் கிய தேசியக்கட்சி கூடுதல் கவ னங்களைச் செலுத்துவதில்லை. எதிர்க்கட்சித் தலைவரான சஜித் எப்போது தீர்மானகர மான தேர்தல்களில் போட்டி யிட மாட்டார்.

பாராளுமன்றத்தில் ஜனாதி பதியை தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தில் ஆரம்பத்தில் சத்தமிட்டுக்கொண்டிருந்தார்.

இறுதியில் டலஸ் அழகப்பெருமவை முன்நிறுத்தி விட்டு ஒதுங்கிக்கொண்டார். எதிர்காலத்திலும் இதுவே நடக்க போகிறது-என்றார். (அ)

## றைஸ்...

வழங்கும் அரிசியை மிதமான வெப்பத்தில் றைஸ் குக்கரில் சமைக்க வேண்டும். சில நிமிடங்களே சமைக்க வேண்டும் - என்று விளக்கமளித்தார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பாக தாம் தூதரகத்தின் கவனத்துக்கும் கொண்டு செல்கிறார் என்றும் கூறினார். (ஐ-03)

## சர்ச்சையான...

இதன் பின்னர், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் கே. பாலகிருஷ்ணன் தகவல் அளிக்கையில்,

சீன அரசாங்கம் வழங்கிய அரிசி தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஆனால், இப்போது நிவாரணமாக வழங்கப்பட்ட அரிசி இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்பட்டது - கொள்வனவும் செய்யப்பட்டது. அரிசி மட்டுமல்ல வழங்கப்பட்ட அனைத்துப் பொருட்களும் இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்பட்டவை. வழங்கப்பட்ட ஒரு பொதி 8 ஆயிரம் ரூபாய் பெறுமதியானவை என்றும் கூறினார். (ஐ)

## தேர்தலுக்கு...

திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற மக்கள்சந்திப்பு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களையும், மத்திய வங்கி பிணைமுறி மோசடியாளர்களையும் சிறைக்கு அனுப்புவதாக கூறி ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்து குற்றங்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டிய ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்து அவர் நாட்டை விட்டு சென்றார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ விவசாயத்துறையை முழுமையாக சீரழித்து முழு நாட்டு மக்களையும் நெருக்கடிக்குள்ளாக்கி விட்டு அவர் தற்போது வெளிநாட்டுக்கு விடுமுறை கால உல்லாச சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

ராஜபக்ஷர்களை பாதுகாப்பதற்காகவே பொதுஜன பெரமுனவினர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று ஐந்து மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் அவர் எந்தப் பிரச்னைக்கு தீர்வு கண்டுள்ளார் என்பதை நாட்டு மக்கள் ஆராய வேண்டும்.

எரிபொருள், எரிவாயு தற்போது தடையில்லாமல் கிடைக்கப் பெறுகிறது என அரசாங்கத்துக்கு சார்பானவர்கள் குறிப்பிடுவது தவறு.

அரசமுறை கடன்களை மீள் செலுத்த முடியாது, நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டது என கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி உத்தியோகப்பூர்வமாக அறிவித்ததை தொடர்ந்து அரசமுறை கடன் செலுத்தும் நிதி மிகுதியானது. அந்த நிதியில்தான் எரிபொருள் மற்றும் எரிவாயு தற்போது இறக்குமதி செய்யப்படுகிறது. ஆகவே, பொருளாதார நெருக்கடிக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாராளுமன்றத்துக்கும் மக்களாணை கிடையாது. நாட்டு மக்கள் அரசியல் மறுசீரமைப்பை எதிர்பார்க்கிறார்கள். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தீர்மானமிக்கது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் பெரும் முயற்சிகளையும் சூழ்ச்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. தேர்தலை நடத்த நிதி இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகிறார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த ஆயிரம் கோடி ரூபாய் இல்லை என்றால், 2023 ஆம் ஆண்டு அரச செலவுகளுக்கு 7 இலட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபாய் அரசுக்கு எவ்வாறு கிடைக்கும் - என்று கேள்வி எழுப்பினார். (ஐ)

## அறிவுச்...

வெளியிடப்பட்டுள்ளது. இதில், 68.37 சதவீதத்துடன், அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

சுவிற்சர்லாந்து, சுவீடன், பின்லாந்து மற்றும் நெதர்லாந்து முதலான நாடுகள், முறையே இரண்டு முதல் ஐந்தாம் இடம் வரை தரப்படுத்தப்பட்டுள்ளன.

41.52 சதவீதத்துடன், 91 ஆவது இடத்தில் இந்தியாவும், 34.44 சதவீதத்துடன் 110 ஆவது இடத்தில் பாகிஸ்தானும் இடம்பெற்றுள்ளன. (ஐ)

## சுகாதார...

மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் டெங்கு, இன்புளுவன்சா உள்ளிட்ட நோய்களின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையும் ஒற்றை எண்களில் காணப்படுகின்ற போதிலும் மரணங்களும் பதிவாகி வருகின்றன. தடுப்பூசிகள் வழங்கப்பட்டு கோவிட் தொற்று பரவலானது சுகாதார தரப்பினரின் கட்டுப்பாட்டில் காணப்படுகிறது.

எனினும், அண்மையில் சீனா, ஜப்பான், தென்கொரியா, தாய்வான், கொங்ஹொங் போன்ற நாடுகளில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அசாதாரணமாக அதிகரித்து வருகிறது.

புதன்கிழமை சுமார் 5 இலட்சத்து 25 ஆயிரம் தொற்றாளர்கள் இந்த நாடுகளில் இனங்காணப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மீண்டுமொரு கோவிட் அலையை எதிர்கொள்ள நேரிடுமா என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

எனவே, தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களாக இருந்தாலும்கூட, சுகாதார விதிமுறைகளை கடுமையாக பின்பற்றுமாறு வலியுறுத்துகின்றோம்.

குறிப்பாக தொற்றா நோயால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலைமையிலுள்ளோர் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும். பொருளாதார நெருக்கடிகளால் சுகாதாரத் துறையானது சவால்களை எதிர்கொண்டுள்ளது.

எனவே, சுகாதார அமைச்சும் விரைவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை - என்றார். (ஐ)

## புளொட்...

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலை ஒன்றாக சந்திக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உட்பட ஆறு கட்சிகளின் தலைவர்கள் கடந்த சனிக்கிழமை - 24ஆம் திகதி தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் எம்.பியின் இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

ஆனால், இந்தச் சந்திப்புக்கு மறுநாள் கூடிய இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, சுரேஷின் ஈ. பி. ஆர். எல். எவ்., சிறீகாந்தாவின் தமழ்த் தேசியக் கட்சி ஆகியவற்றை இணைத்துக் கொள்ள முடியாது என்றும் தமிழரசு, ரெலோ, புளொட் கட்சிகளே தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கும் என்றும் அறிவித்திருந்தன.

இந்த நிலையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான இலங்கை தமிழரசு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளை தவிர வேறு கட்சிகளுடன் தேர்தல் கூட்டை ஏற்படுத்த முடியாது என்பது இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுவின் முடிவு என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ)





காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் திண்ணபுரம் சிவன்கோவிலில் நேற்று மார்கழி திருவெம்பாவை உற்சவத்தின் இரண்டாம்நாள் திருவிழாவின் போது சுவாமி வீதி உலா வருவதைக் காணலாம்.

# மகளையே வன்புணர்வு செய்த முன்னாள் இராணுவ சிப்பாய் கைது!

அநுராதபுரம், டிசெ. 30

இரண்டரை வருடங்களாக தனது தந்தையால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட 12 வயதான மகள், துன்புறுத்தல்களை பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில், 12 கிலோமீற்றர் தூரம் தனியாக நடந்து சென்று அநுராதபுரம் - கல்நேவ பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்தப் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 35 வயதான கம்பளை பிரதேசத்தை சேர்ந்த முன்னாள் இராணுவ சிப்பாய் எனவும், இவர் மூன்று மாதங்களுக்கு முன்னர் கல்நேவ பிரதேசத்துக்கு சென்றுள்ளார்.

துன்புறுத்தலை எதிர்கொண்ட சிறுமி 2019இல் பருவமடைந்ததாகவும், அன்றிலிருந்து அன்று முதல் தந்தையால் பல சந்தர்ப்பங்களில் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் ஐந்து நாட்களுக்கு முன்னர், சிறுமியின் தாய், கம்பளை பகுதிக்கு தேயிலை பறிப்பதற்காக சென்ற போது, சிறுமியை தந்தை பல தடவைகள் வன்புணர்வு செய்துள்ளார். இந்த கொடுமையை பொறுக்க முடியாத சிறுமி, வீட்டிலிருந்து தனியாகப் புறப்பட்டு பொலிஸ் நிலையம் சென்றுள்ளார். சிறுமியின் வாக்குமூலத்தை பதிவு செய்த பின்னர், பொலிஸ் குழுவொன்று உடனடியாக வீட்டுக்கு சென்றபோது தந்தை பிரதேசத்தை விட்டு தப்பியோடினார்.

பின்னர் சந்தேக நபர் இப்பலோகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்துங்கமவில் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியிடம் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சக்ரானுக்கு...

ஒக்ரோபர் 23ஆம் திகதி தமிழகத்தில் இடம்பெற்ற காரில் சிலிண்டர் வெடிக்க வைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்திலேயே இவர் கைது செய்யப் பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 4இல்)

## விவசாயிகளுக்கு...

800 கோடி ரூபாயை வழங்கியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த நிதியை வழங்கியது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், "இலங்கையில் நெல் செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நெற்காணியின் அளவு 8 இலட்சம் ஹெக்ரெயர் ஆகும். ஏற்கனவே பயிரிடப்பட்டு இன்னும் பயிரிடப்பட்டு வரும் நெற்பயிர்களின் அளவு 7 இலட்சத்து 60 ஆயிரம் ஹெகரெயரை தாண்டியுள்ளது" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## பயிரிடப்படாத...

கையகப்படுத்தப்படவுள்ள மாவட்டங் களில் ஐந்து வருடங்களாக பயிர் செய்யப்படாத 2,774 ஏக்கர் வயல் நிலங்களும் அடங்கும் என்றும் தெரிய வருகிறது. (ஐ)

## 24 லட்சம்...

இழந்தனர். இதனால், அந்தக் குடும்பங்கள் சொத்துகளை விற்று கடனாளிகளாகினர். அவர்களின் உணவை குறைக்கவும் பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தவும் முடிவு செய்திருந்தனர்.

நாட்டின் மக்கள் தொகையில் 26வீதத்தினர் அதாவது 57 இலட்சம் பேருக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகின்றன. இந்த நாட்டில் 50 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் உணவுப் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றனர்.

மேலும், இந்த நெருக்கடி 34.5 இலட்சம் மக்கள் அதிகமான விவசாயிகளை பாதித்துள்ளது. அத்துடன், 24.3 இலட்சத்துக்கும் அதிகமான ஊட்டச் சத்து தேவையுள்ளோரையும் அத்தியாவசிய மருந்துகள் தேவைப்படும் கிட்டத்ஒஒட்ட 20 இலட்சம் பேரையும் கடுமையாகப் பாதித்துள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மின் கட்டண உயர்வால் பங்குச்சந்தையில் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 30

இலங்கையில் மின்சாரக் கட்டணங்களின் உயர்வு அறிவிப்பு காரணமாக, கொழும்பு பங்குச்சந்தையின் பங்குகள் வீழ்ச்சியடைந்து, கடந்த ஒன்றரை மாதங்களில் மிகக் குறைந்த வருமானத்தை பெற்றதாக பங்குச்சந்தை முகவரொருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முக்கிய அனைத்து பங்கு விலைக் குறியீடு 0.49 சத வீதம் அல்லது 41.28 புள்ளிகள் குறைந்து 8,411.42 அலகுகளாக இருந்தது.

2023 ஜனவரியில் 65 வீத மின் கட்டண உயர்வு குறித்து அரசாங்கம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இதன் காரணமாகவே முதலீட்டாளர்களின் பங்க ளிப்பு வீழ்ச்சியடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மின்சாரக் கட்டண உயர்வு போதுமானதாக இல்லாத தால் ஜனவரியில் மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்த திட்டமிட்டுள்ளதாக

மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் திரவ தன்மைக்கொண்ட, எஸ் அன்ட் பி எஸ்எல் 20, குறியீடு 0.92 சதவீதம் அல்லது 24.56 புள்ளிகள் குறைந்து 2,631.03 ஆக முடிவடைந்தது.

சந்தையில் நேற்று 856 மில்லியன் ரூபா வர்த்தக புரள்வு மேற்கொள்ளப்பட்டது.

இது இந்த காலாண்டில் தினசரி சராசரி புரள்வாக இருந்த 2.9 பில்லியன் ரூபாயில் நான்கில் ஒரு பங்காகும்.

சந்தையில் 13.5 மில்லியன் ரூபா நிகர வெளிநாட்டு வரவு காணப்பட்டது - என்றார். (அ)

# அரசியலமைப்பு பேரவைக்கான தமிழ் எம்.பி நியமனம் இழுபறி!

கொழும்பு, டிசெ. 30

அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிப்பதில் தொடர்ந்தும் இழு பறிநிலை நிலவுவதாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு பேரவைக்கு 7 பாராளுமன்ற உறுப் பினர்களும், 3 சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

அவர்களில் தற்போது 5 சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், எஞ்சிய ஒரு பாராளுமன்ற உறுப்பி னர் வெற்றிடத்திடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் பெயரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்மொழிந்ததுடன், தமிழ்க் கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ளன.

இதற்கு உத்தர லங்கா சபாகய கட்சி எதிர்ப்பு வெளி யிட்டதை அடுத்து, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் நியமனமானது இழுபறி நிலையில் உள்ளதாக மனோ கணேசன் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தர்மலிங்கம் சித்தார்த்தனின் நியமனத்துக்கு தொடர்ந்தும் அழுத்தம் வழங்குவதாக வும் அவர் கூறினார்.

இதேவேளை, அரசியலமைப்பு பேரவையில் உள் வாங்கப்படவுள்ள மூன்று சிவில் சமூக செயற்பாட்டா ளர்களில், மலையக இந்திய வம்சாவளி தமிழர் சார்பில் பிரதாப் ராமானுஜத்தின் பெயரை பரிந்துரைத்துள்ள தாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டார். (அ)

# நாளாந்த உணவு வேளைகளை குறைத்துள்ள இலங்கை மக்கள்

## உலக உணவுத்திட்டம் தகவல்

கொழும்பு, டிசெம்பர் 30

**இலங்கையின் சனத்தொகையின் 76வீதமானவர்கள் உணவுப் பாதுகாப்பின்மை காரண மாக உணவு சம்பந்தமாக மாற்றுவழிகளை பின்பற்றி வருவதாக உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது. இலங்கை உணவு பாதுகாப்பு கண்காணிப்பு தொடர்பான புதிய அறிக் கையில் உலக உணவுத்திட்டம் இதனை கூறியுள்ளது.**

இலங்கை மக்கள் தொகையில் 73 வீதமானோர் விலையிலும் போஷாக்கிலும் குறைந்த உணவு களை பயன்படுத்த ஆரம்பித்துள்ள துடன் 52 வீதமானவர்கள் பெற் றுக்கொள்ளும் உணவின் அளவை குறைத்துக்கொண்டுள்ளனர்.

மேலும் 40 வீதமானோர் உணவு சாப்பிடும் வேளைகளை குறைத்துக் கொண்டுள்ளனர்.

இலங்கையின் தென் பகுதியே உணவு பாதுகாப்பு தொடர்பான பிரச்சினையில் அதிகம் பாதிக்கப் பட்டுள்ளது.

தென் பகுதி மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்

இலங்கையின் தென் பகுதியில் 48 வீதமானவர்கள் உணவு பற்றாக் குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனை தவிர சப்ரகமுவ மாகா ணத்தில் 45 வீதமானோரும், ஊவா மாகாணத்தில் 43 வீதமானோரும், மத்திய மாகாணத்தில் 36 வீதமா னோரும் உணவு தொடர்பான பிரச்னையை எதிர்நோக்கி வரு கின்றனர்.

இதனை தவிர வடமத்திய மாகா ணத்தின் சனத்தொகையில் 34 வீத மானோரும், வடமேல் மாகாணத் தில் 31 வீதமானோரும் உணவு பிரச்னையை எதிர்நோக்கி வருகின்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களிலேயே உணவு தொடர் பான பிரச்னை குறைவாக காணப் படுவதாகவும் உலக உணவுத்திட் டம் சுட்டிக்காட்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 26 வீதமா னோரும் வடக்கு மாகாணத்தில் 25 வீதமானோரும் உணவு தொடர் பான பிரச்னையை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் உலக உணவுத் திட்டத்தின் அறிக்கையில் கூறப்பட் டுள்ளது. (அ)

# ஐந்து மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு இலங்கையில் மனிதாபிமான உதவி அவசியம்!

கொழும்பு, டிசெ. 30

இலங்கையில் 5 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு மனிதாபி மான உதவிகள் தேவைப்படுவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைக் குழு தெரிவித்துள்ளன.

குறித்த அமைப்பின் தரவுக ளுக்கு அமைய, நாட்டில் 5.7 மில்லி யன் மக்கள், மொத்த சனத்தொகை யில் 26 வீதம் அல்லது அதற்கும் மேற்பட்ட அளவானவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் இலங்கை சனத் தொகையில் 4.9 மில்லியன் அதா வது 22 சதவீதமான மக்கள் உண வுப் பற்றாக்குறையால் பாதிக்கப் பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலு வைச் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் நாட்டிலுள்ள 11 வீதமான குடும்பங்கள் வருமா னத்தை இழந்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள சங்கம், வருமான மட்டம் 62 வீதமாக குறைவடைந் துள்ளதாக தெரிவித்துள்ளது.

மொத்த சனத்தொகையில் 85 வீதமானவர்கள் தற்போதைய சூழலுக்கு ஏற்றாற்போல மாறியுள்ள தாகவும், 5 வயதுக்குட்பட்ட சிறார் கள் போஷாக்கு குறைபாட்டை எதிர்கொள்வதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைக் குழு குறிப்பிட்டுள் ளது. (அ)

# மக்களாணைக்கு பயந்து தேர்தலை பிற்போட அரசு வெட்கப்பட வேண்டும்!

## வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, டிசெ. 30

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டால் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து அரசாங்கத்துக்கு எதிராக மாபெரும் போராட்டத்தில் ஈடுபடுவோம். மக்களாணைக்கு அச்சமடைந்து தேர்த லை பிற்போட முயற்சிப்பதையிட்டு அரசாங்கம் வெட் கமடைய வேண்டும் என இடதுசாரி ஜனநாயக முன்ன ணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணியாக போட்டியிட தீர்மானித்துள்ளோம். அனைத்து அரசியல் கட்சிகளும் கூட்டணி அடிப்படை யில் போட்டியிட பேச்சுக்களை முன்னெடுத்துள்ளன. எந்தக் கட்சியும் இனி தனித்து போட்டியிட்டு வெற்றி பெற முடியாது.

2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதிக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

இருப்பினும் தேர்தலை பிற்போட அரசாங்கம் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தேர்தலுக்கு நாங்கள் தயார் என பொது இடங்களில் குறிப்பிட்டுக்கொண்டு அரசாங்கம் திரைமறைவில் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறது.

தேர்தலை நடத்த நிதி இல்லை என அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது,தேர்தலை நடத்த அரசாங்கம் தயாரில்லை. மக்களாணைக்கு செல்வதை தடுப்பதற்காக தேர்தலை பிற்போட முயற் சிப்பதையிட்டு அரசாங்கம் வெட்கமடைய வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டால் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் போராட்டத்தில் ஈடுபடுவோம். மக்கள் ஆதரவு உள்ளது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார்.

# சீனாவின் மத்தியஸ்த போக்காலேயே ஐ. எம். எவ்வின் கடன் இழுபறியாகிறது

## நீதி அமைச்சர் விஜயதாஸ சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 30

“சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கை நிதி உதவி பெறும் விவகாரம் இழுபறியில் உள்ளது. சீனாவின் மத்தியஸ்தமே அதற்குக் காரணம்.”- இவ் வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

‘சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெறுவதற்கான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியா - சீனாவின் நிலைப்பாடு என்ன?’ என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “இந்த விடயத்தில் நாம் நடுவில் இறுகி நிற்கின்றோம். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதி உதவி பெறும் விடயத்தில் சீனா மத்தியஸ்தம் செய்து உதவி வருகின்றது. அது இந்தியாவுக்கு விருப்பம் இல்லை. ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு செயற்படும் நாடுகள் அவை. இந்த இரண்டு நாடுகளிடம் உதவியைப் பெற்றுக்கொண்டுதான் நாம் பயணிக்கின்றோம்.

சீனா மத்தியஸ்தம் வகிப்பதால் இந்தியா கொண் டுள்ள அதே நிலைப் பாட்டைப் போல் இன்னும் சில நாடுக ளும் கொண்டுள்ளன. முக்கியமாக அமெ ரிக்கா. இதனால் இந்த விவகாரம் இழு பறியில் உள்ளது” - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.